288

288

விஷு - பங்குனி
சித்ரபாநு - சித்திரை

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 4

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

14 MAY 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

April, 1942
Vol. 1, No. 4

ரூப

3L
Q22வை11,N41
N42.14.
310102

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

—

		பக்கம்
1.	அர்ச்சாவதார வைபவம்	108
2.	தேவாலய தர்மம்	114
3.	பாசுரங்களின் பகுதி (அமலனாதிபிரான்)	121
4.	பகவத் வைபவ ஸல்லாபம்	127
5.	வாக்கின் வைபவம்	135
6.	உருவெளித் தோற்றம்	137
7.	செய்திகள்	139
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	143

ஸ்ரீ.

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப் பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன், வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசும் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	விஷு ௵ பங்குனி ௴ - சித்திரபானு ௵ சித்திரை ௴	ஸஞ்சிகை 4

“ அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥”

14 MAY 1942
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அர்ச்சாவதார வைபவம்

[ஸஞ்சிகை 3: பக்கம் - 75 தொடர்ச்சி]

மேலும் பூர்வ மீமாம்ஸையில் 'அபி வா கர்த்ருஸாமாந்யாத் ப்ரமாணமநுமாநம் ஸ்யாத்' என்று தொடங்கி, 'அபி வா காரணாக்ரஹணே ப்ரயுக்தாநி ப்ரதீயேரந்' இத்யாதி ஸூத்ரங்களால் 'வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம்' என்பதை அநுஸரித்து, வேதா விருத்தங்களான மநுஸ்ம்ருதி முதலானவற்றுக்கும் வஸந்தோத்ஸவாத்யாசாரங்களுக்கும் ப்ரமாண ஸ்தாபநம் பண்ணப்பட்டிருப்பதால், ஸாக்ஷாத் ஶ்ருதிப்ரதிபாத்ய மின்றிக்கே இருந்தாலும், ஸ்ம்ருதீதிஹாஸ பஞ்சராத்ராதி ப்ரஸித்தமான அர்ச்சாரூபத்திலும் தத்பூஜாதி ஆசார ஸித்தமான தத்வ்யவஹாரநுஷ்டாநங்களிலும் மீமாம்ஸா ந்யாயம் அறிந்த புத்திமான்களுக்கு ஒருவித விப்ரதிபத்தியும் பண்ண இடமில்லை.

ததா ச - மநுஸ்ம்ருதௌ [4-ம் அத் - 29 - வது ஶ்லோகம்].

'ம்ருதம் காம் தைவதம் விப்ரம் க்ருதம் மது சதுஷ்பதம்-
ப்ரதக்ஷிணாநி குர்வீத ப்ரஜ்ஞாதாம்ஶ்ச வநஸ்பதீந் - [அ 4 -
152 - 153) மைத்ரம் ப்ரஸாதநம் ஸ்நாநம் தந்ததாவநமஞ்ஜநம் -
பூர்வாஹ்ண ஏவ குர்வீத தேவதாநாம் ச பூஜநம் - தை
வதாந்யபிகச்சேத்து தார்மிகாம்ஶ்ச த்விஜோத்தமாந் - [அ 9-285]
ஸங்க்ரமத்வஜயஷ்டீநாம் ப்ரதிமாநாம் ச பேதக:'

இத்யாதி ஶ்லோகங்களால் அர்ச்சாரூபியான பகவானுடைய ப்ரதக்ஷிண பூஜநாபிகமநாதிகளிலும் அர்ச்சா விக்ரஹத்தை உடைத்தவனுக்குத் தண்டந ப்ரகாரங்களும் சொல்லப்படுகின்றன. இதிஹாஸோத்தமமான ஶ்ரீமத் ராமாயணத்தில் [அயோத்யா காண்டம் 6-வது ஸர்க்கத்தில்,]

'கதே புரோஹிதே ராம: ஸ்நாதோ நியதமாநஸ: |
ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் ||
ப்ரக்ருஹ்ய ஶிரஸா பாத்ரீம் ஹவிஷோ விதிவத்ததா |
மஹதே தைவதாயாஜ்யம் ஜுஹாவ ஜ்வலிதேऽநலே ||
ஶேஷம் ச ஹவிஷஸ்தஸ்ய ப்ராஶ்யாஶாஸ்யாத்மந: ப்ரியம் |
த்யாயந்நாராயணம் தேவம் ஸ்வாஸ்தீர்ணே குஶஸம்ஸ்தரே |
வாக்யதஸ்ஸஹ வைதேஹ்யா பூத்வா நியதமாநஸ: |
ஶ்ரீமத்யாயதநே விஷ்ணோ: ஶிஶ்யே நரவராத்மஜ: ||'

3/10/02

இத்யாதி ஸ்லோகங்களால் அர்ச்சாரூபியான பகவானுடைய ஸத்பாவமும், அவனுடைய ஆலயமும், ஸ்ரீராமனால் செய்யப்பட்ட அவனுடைய ஆராதந ப்ரகாரங்களும் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்விஷயத்தில்,

ஸ்ரீகீதையில், 'யே யதா மாம் ப்ரபத்யந்தே'- (விஷ்ணுதர்மே) 'ஸர்வேஷாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம்-க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: - தாமர்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத் - விஶத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்' (ஸ்ரீபாஞ்சராத்ரே) 'ஸர்வாதிஶாயிஷாட்குண்யம் ஸம்ஸ்ரிதம் மந்த்ரபிம்பயோ:- மந்த்ரே வாச்யாத்மநா நித்யம் பிம்பே து க்ருபயா ஸ்ரிதம் - பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸாமர்த்யாவதிஷ்டதே-க்ஷேத்ரே மந்த்ரமயீம் ஸக்திம் யதாத்மஸாத் - ஸர்வாபி லௌகிகீ யா ஸா ஸர்வ ஸாவிதாத்மநாம் - மந்த்ர மந்த்ரேஶ்வரந்யாஸாத் ஸாபி ஷாட்குண்யவிக்ரஹா' (பாரமேஶ்வரே) 'விஶேஷேண ஸ்வயம் வ்யக்தே திவ்யே ஸித்தே ச ஸைவ து | மாநுஷே து'

இத்யாதி ப்ரமாணங்களும் ப்ராமாணிகர்களுக்கு ஸாதகதமங்களே.

ஶுக்ல யஜுஸ் ஸம்ஹிதையில் 'ந தஸ்ய ப்ரதிமாஸ்தி யஸ்ய நாம மஹத்யஶ:' என்று ப்ரதிமா நிஷேத கண்டோக்தி இருக்கிறதென்று சொன்னதும், வாக்யார்த்த ஜ்ஞாந விதுரதாப்ரயுக்த மென்று நிருபர்களுக்கு நிஶ்சித விஷயம். ததாஹி- 'ந தஸ்ய ப்ரதிமாஸ்தி' என்கிற வாக்யத்திலுள்ள 'ப்ரதிமா' ஶப்தத்துக்கு ஸாத்ருஶ்யம் அர்த்தமாகையாலே, பகவானுக்கு ஒருவரோடும் ஸாம்யமில்லை யென்று அர்த்தம் சொல்வதே மேலுள்ள வாக்யங்களுக்கும் ப்ரகரணத்திற்கும் உசிதமாம். ஸ்ரீமத் ராமாயணத்தில் 'தே தஸ்ய வஜ்ரப்ரதிமாஸ்ஸ்வஸ்ருவிஷோபமா:' என்றும், கீதையில் 'லோகத்ரயேப்யப்ரதிமப்ரபாவ:' என்றும், காவ்ய 'பதத்தம் ப்ரதிமஸ்வோநிதி:' என்றும், ஸாத்ருஶ்யார்த்தத்திலேயும் ப்ரதிமா ஶப்த ப்ரயோகம் பஹுவாகக் காண்கையாலே, இங்கு அந்தப் பதத்திற்கு ஸாத்ருஶ்யார்த்தகத்வம் சொல்வதே ந்யாய்யம். வாஜஸநேய வ்யாக்யாதாக்களான உத்பட மஹீதராதிகளும் இவ்வாக்யத்திலுள்ள ப்ரதிமா ஶப்தத்தை உபமாந பரமாகவே வ்யாக்யாநம் பண்ணினர்கள். ஸ்ரீபராஶர பட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்தில், 'அதுல:' என்கிற நாம வ்யாக்யாநாவஸரத்தில் 'ந தஸ்ய ப்ரதிமாஸ்தி என்னும் வாக்யத்தை ப்ரமாணமாக அருளிச்செய்தார். 'ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே' என்கிற ஶ்வேதாஶ்வதர வாக்யத்தில் 'ந தத்ஸம:' என்கிற அம்ஶத்தால் சொன்ன ஸாம்யாபாவத்தை

'ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்யஶ:' என்கிற இந்த ஶுக்ல யஜுர் வாக்யம் சொல்லுகிறது. 'ஜ்யாயிஷ்ட உபாஸ்யதே' என்கிற அம்ஶத்தால் சொன்ன உத்கர்ஷாபாவத்தை 'ந தஸ்யேஶே கஶ்சந தஸ்ய நாம மஹத்யஶ:' என்கிற க்ருஷ்ண யஜுர்வேத நாராயணோபநிஷத் வாக்யம் சொல்லுகிறது. ஆகையால் ஸ்தாந பாடத்தாலும் இங்கு ப்ரதிமா ஶப்தம் ஸாம்யபரமென்பதே ப்ராமாணிகம். 'ப்ரதிமா நாஸ்தி' என்கிற வாக்யத்திலுள்ள 'ப்ரதிமா' ஶப்தத்துக்கு விக்ரஹ பரத்வம் சொல்வார்க்கும், 'நஞ்'ஞுக்கு அத்யந்தாபாவம் அர்த்த மாகையால் விக்ரஹமில்லை யென்று அர்த்தம் சொல்லவேண்டும். அப்பொழுது முன்சொன்ன ஶ்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ராதி ப்ரதிபாத்யங்களாய் ஸ்ரீரங்காதி ஸ்தலங்களில் ப்ரஸித்தமாக ப்ரத்யக்ஷ த்ருஶ்யங்களாயு மிருக்கும் விக்ரஹங்களில்லை யென்றால் பாயிதார்த்தமாம். 'ந கலஞ்ஜம் பக்ஷயேத்' என்பது போல் 'ந தஸ்ய ப்ரதிமாம் குர்யாத்' என்று நிஷேத வாக்ய மில்லாமையால், இவ்வாக்யத்தால் ப்ரதிமை நிஷேதிக்கப்படுகிறதென்று சொல்வது ஸம்ஸ்க்ருத பாஷாநபிஜ்ஞதாப்ரயுக்தமே. 'அவனுக்கு ப்ரதிமையில்லை' என்று வாக்ய மிருக்க, 'ப்ரதிமையில் அவனில்லை' என்று அதற்கு அர்த்தம் சொல்வது அத்யந்தாஜ்ஞாநிகளின் வார்த்தையேயாகும்.

மேலும், 'ப்ரதிமா நாஸ்தி' என்கிற வாக்யார்த்தத்திற்கு ஸாதக ஹேதுக்களைச் சொல்லும் 'யஸ்ய நாம மஹத்யஶ:,' 'ஹிரண்யகர்ப இத்யேஷ:' இத்யாதி வாக்யங்களும் பாயிதங்களாம். ['யஸ்ய நாம மஹத்யஶ:'] எவனுக்கு மஹத்தான யஶஸ் இருக்கிறதோ அவனுக்கு விக்ரஹமில்லை என்று சொன்னால், அது ['காகஸ்ய கார்ஷ்ண்யாத் தவல: ப்ராஸாத:'] காக்கை கறுப்பாகையால் உப்பரிகை வெளுப் பென்பதோடொக்கும். ப்ரத்யுத, எவனுக்கு யஶஸ் அதிகமோ அவனுக்கு விக்ரஹம் ஏற்படுத்தி அர்ச்சிக்க வேண்டுமென்று சொன்னாலல்லவோ அங்கு ஸாத்யஹேதுக்கள் ஸுஸம்பந்தங்களாம். ப்ரதிமா ஶப்தத்துக்கு ஸாத்ருஶ்யார்த்தகத்வம் கொள்ளில், எவனுக்கு மஹத்தான யஶஸ்ஸோ அவனுக்கு லோகத்தில் ஸாம்யமில்லை யென்பது ஸுஸங்கதமாம்.

'ஹிரண்யகர்ப இத்யேஷ:' என்கிற வாக்யத்திற்கு 'ஹிரண்யகர்ப: ஸமவர்த்ததாக்ரே பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்' இத்யாதியான முன்சொன்ன ருக்குக்களில் ப்ரதிபாத்யனும் [ஏஷ:] இந்த பகவானே என்று அர்த்த மாகையாலும், விஷ்ணு ஸ்ம்ருதியில் 65-வது அத்யாயத்தில் 'ஹிரண்யகர்ப இத்யஷ்டாபிர்ஹவிர் நிவேதயேத்' என்று அர்ச்சாரூபியான பகவானுடைய ஹவிர்நிவேதநத்தில் இந்த 8-ருக்குக்களும் விநியுக்த மாகையாலும், அந்த ஶ்ருதிவாக்யத்தையை ஹேதுவாகச் சொல்லி, 'ந தஸ்ய ப்ரதிமாஸ்தி' என்று சொன்னால், அதற்கு

ஸாத்ருஸ்ய நிஷேத பரத்வம் சொல்வது உசிதமேயொழிய, அர்ச்சா விக்ரஹ நிஷேத பரத்வம் சொல்வது உசிதமாகாது. அவ்வநுவாகத்தில் 'கஸ்மை தேவாய ஹவிஷா விதேம' என்று வதேவதே ஸம்ப்ரதாநமாக அர்ச்சாரூபியான நாராயணனே சொல்லப்படுகிறான். சதுர்முக வாசகமான க-ஶப்தத்தின் சதுர்த்திக்குக் 'காய' என்று ரூபமாகையாலும், யொமிஹி வரர ஜிஜ்ஞாஸ்யனான நாராயணனே ஸர்வநாம கிம் ஶப்த வாச்யனுகைக்கு யோக்யனுகையாலும், 'வனகொ நெகஸ்ஸவ: க: கிம்' என்று ஸஹஸ்ர நாமத்தில் அவன் பேர் சொல்லுகையாலும், 'கஸ்மை தேவாய' என்று நாராயணனே சொல்லப்படுகிறு னென்பதில் விவாதத்திற்கு இடமில்லை.

'ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்' என்று ப்ரக்ருஷ்ட ஜ்ஞாநம் இல்லாதவர்களுக்கே ப்ரதிமையில் தேவதாபுத்தி பூஜநாதிகள் சொல்லுகையால், ப்ரக்ருஷ்ட ஜ்ஞாநவான்களுக்கு ப்ரதிமையில் தேவதாபுத்தி பூஜநாதிகள் ந்யாய்யமாகா என்று சொன்னது பூர்வோத்தர விருத்தமும் தவிர அத்யந்தம் அஜ்ஞபாஷணமுமாம். எங்ஙனேயென்னில்: ப்ரதிமையில் பகவத் ஸாந்நித்ய மில்லையென்று சொல்லுகிறவர்களுக்கு, அப்ரபுத்தர்களுக்கு மாத்ரம் ப்ரதிமையில் பகவான் இருக்கிறுர் என்று சொல்லுகிற இந்த வாக்யமே நேர் விருத்தமன்றோ? ப்ரதிமையில் தேவதையில்லாவிட்டாலும், அஜ்ஞர்களுக்கு அதில் தேவதாபுத்தி யிருக்கிறதென்பதே அந்த வாக்யத்திற்கு அர்த்தமென்னில், இது முன்பின் தெரியாத கண்மூடியின் வார்த்தை.

'அப்ஸு தேவோ மநுஷ்யாணாம் ஹ்ருதி தேவோ மநீஷிணாம் ।
ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்ஶிநாம் ॥'

என்றன்றோ ஶ்லோகம் இருக்கிறது? அதில் யோகவஶீக்ருதனுன பகவான் ஸர்வதா யோகிகளுடைய ஹ்ருதயத்தில், 'தஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்திதே ஸாஜி ஶிவா ஶூநாம் ஸதாவீதீவ நிஜ்ஜரா நவமேவதஹா' என்கிறபடி ஸந்நிஹிதனுக இருக்கிறுனென்றே 'ஹ்ருதி தேவோ மநீஷிணாம்' என்கிற முன் பாதத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டுமாகையால், தத்அநுகுணமாக இங்கும் ப்ரதிமையில் ஸந்நிஹிதனுக இருக்கிறுனென்றே அர்த்தம் சொல்வது மிகவும் உசிதம். 'ஸர்வத்ர ஸமதர்ஶிநாம்' என்கிற மேல் பாதத்திற்கும், 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே । வாஸுதேவஸ்ஸர்வமிதி' என்றும், 'வனகாஜஹஜ்ஜி மெராவிதெ யத்ஸர்வத்ர தத்க்ஷணம்' என்றும் சொல்லுகிறபடி, ப்ரஹ்லாதஜடபரதவாமதேவாதிகளைப்போல் ஸமதர்ஶிகளான மஹான்களுக்கு எங்கும் ஸந்நிஹிதனுய் ப்ரத்யக்ஷவிஷயமாக இருக்கிறுனென்றே அர்த்தம் சொல்லவேண்டு மாகையாலும், மஹான்களுக்கு ப்ரதிமையில் பகவான்

இல்லாமலிருக்கச் செய்தேயும் எங்கும் பகவான் இருப்பதாகப் புத்தி இருக்கிறதென்று சொல்வது அத்யந்தம் அஸங்கதமாகையாலும், அந்த வாக்யத்துக்கு அநுகுணமாக ப்ரதிமையிலும் பகவான் ஸந்நிஹிதனாக இருக்கிறானென்று சொல்வதே வ்யுத்பந்நர்களுக்கு உசிதமாம். எங்கும் பகவானைப் பார்க்கும் ஸமதர்ஸிக்குப் பகவான் ப்ரதிமையிலும் ஸந்நிஹிதனாய்த் தென்படவேண்டு மாகையினால், ப்ரதிமையில் பகவானில்லை யென்று தான் சொல்ல முடியுமோ? ப்ரதிமையில் பகவானைப் பார்க்கும் ஸமதர்ஸிகளைத்தான் ப்ரபுத்தர்கள் அல்லரென்று சொல்ல முடியுமோ? ஆகையால் 'அபி' என்று ஒரு பதத்தை அத்யாஹரித்து, ஸமதர்ஸநம் இல்லாத அப்ரபுத்தர்களுக்கும் ப்ரதிமையில் பகவான் ஸந்நிஹிதனாய் நின்று ஸ்வாராத்யன் ஆகிறானென்று அர்த்தம் சொல்வதே பூர்வோத்தரங்களுக்கு மிகவும் ஸங்கதம். இப்படிச் சொல்லாவிட்டால், ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீரங்கநாதனை ஆராதித்தவர்களாகச் சொல்லப்பட்ட ராம விபீஷணாதிகளும் அஜ்ஞர்களாக ப்ரஸங்கிக்கும். இந்த ம்ருடீ ப்ரஜ்ஞர்களும், ராமாதிகளைத் தங்களைக் காட்டிலும் அப்ரபுத்தர்களாக ஒப்புக்கொள்ளாததால் இதில் இஷ்டாபத்தி ஸாஹஸமாம்.

'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்'

என்கிற கீதாஸ்லோகமும், இதை அடியொற்றின 'தமருகந்த தெவ் வுருவ மவ்வுருவம்' என்கிற ஸ்ரீ ஸூக்தியும், அந்தந்த பக்தர்கள் உகந்தருளின ப்ரதிமையில் ஸாந்நித்யம் பண்ணி, பகவான் அவரவர்களை ரஞ்ஜிப்பிக்கிறானென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகின்றன. ஸௌநகரும்,

'ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம் |
க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: ||
தாமர்ச்சயேத்'

இத்யாதிகளில் பக்தனுக்கு ப்ரீதிவிஷயமான விக்ரஹத்தில் அர்ச்யனாகப் பகவான் ஸந்நிஹிதனாகிறான் என்று சொல்லி, விஸ்தாரமாய்ப் பூஜா த்யாநாதிகளை அருளிச்செய்தார். ஒரு பக்தன் தனக்கு ப்ரியமான ஒரு ப்ரதிமையைப் பண்ணி, ஶாஸ்த்ரீயமான மந்த்ரங்களால் அதில் பகவானை ஆவாஹநம் பண்ணினால், பகவானும் அந்த ப்ரதிமைக்கு ஸமாநமாய் ஷாட்குண்யமயமாய் அப்ராக்ருதமுமான ஒரு ஶரீரத்தைப் பரிக்ரஹித்து அந்த ப்ரதிமையில் ப்ரவேஶித்து, நீரில் பாலைக் கலந்தாற்போல் 'இது ப்ராக்ருதம் இது அப்ராக்ருதம்' என்று அறியவொண்ணாதபடி நின்று, பக்தர் பண்ணும் பூஜாதிகளைப் பரிக்ரஹிக்கிறானென்று

'பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸாந்நித்யாவதிஷ்டதே |
ஜநோக்ருதாம் பூஜாம் ஹோமஸம்ஸ்க்ருதிம் ததாத்மஸாத் ||'

இத்யாதி பாஞ்சராத்ர வசநங்கள் உத்கோஷிக்கின்றன.

'ஆயாது வரதா தேவீ' என்கிற மந்த்ரத்தால் காயத்ரீ தேவதையை ஆவாஹநம் பண்ணி ஜபித்து, 'உத்தமே ஶிகரே தேவி' என்கிற மந்த்ரத்தால் அந்தத் தேவதையை உத்வாஸநம் பண்ணுகிற வைதிகர்களுக்கு ஶாஸ்த்ரீய மந்த்ரங்களால் ஆவாஹிதனான பகவானுக்கு ப்ரதிமையில் ஸாந்நித்யமில்லையென்று சொல்ல எப்படித் துணியும்? ஸமஸ்த வைதிகர்களும் ஶ்ராத்தங்களில்,

'ஆயாந்து பிதரஸ்ஸோம்யா ஸம்ஹிதா: பதிபி:
வஸுருத்ராதித்யா:..........விஶ்வேதேவா: ஶ்ருணுத..........'

இத்யாதி மந்த்ரங்களாலே தர்ப்பங்களில் பித்ருக்களையும் விஶ்வேதேவாதிகளையும் ஆவாஹநம் பண்ணி ஈஶ்ராவி ஆராதிக்கக் காண்கிறோம். பித்ராதிகள் தர்ப்பங்களிலும் நிமந்த்ரித ப்ராஹ்மணர்களிலும் ஸந்நிஹிதராகிறார்களென்றால், பகவான் ப்ரதிமையில் ஏன் ஸந்நிஹிதனாக மாட்டான்?

இப்படி அவாதிதமான ஶ்ருதி ஸ்ம்ருத்யாசார யுக்த்யாதிகள் இருக்க, அர்ச்சாரூபியான பகவானிடத்தில் ஶ்ரத்தையில்லாதவன் ஸந்த்யாவந்தந ஶ்ராத்தாதிகளிலும் ஶ்ரத்தாளுவாக மாட்டான். ஆகையால், அப்பரம நாஸ்திகனுக்கு வேதாதி ப்ரமாணங்களைக்கொண்டு எப்படிப் பதில் சொல்வது? இவர்கள் வாஹ்ய சார்வாகாதிகளைப்போல் ஸர்வாத்மநா வேதங்களையும் ஜீவேஶ்வர தத்வங்களையும் அங்கீகரிக்காமலிருந்தால் அது நமக்கு மிகவும் க்ஷேமமாயிருக்கும். அப்படிக்கில்லாமல் வேதங்களை ஒப்புக்கொள்வதுபோல் அபிநயித்து, வேதஸமாஜம் ப்ரஹ்ம ஸமாஜம் என்கிறாப்போல் சில நாமங்களைத் தரித்து, ஶிதம் வவ ப்ரஜ்ஞர்களான நம் ஆர்யஜநங்களை ப்ரலோபநம் பண்ணுவதாலேயே நமக்கு மாநஸவ்யதை விஞ்சுகிறது. ஆகையால் இனி,

'லபேத ஸிகதாஸு தைலமபி யத்நத: பீடயந்
பிபேச்ச ம்ருகத்ருஷ்ணிகாஸு ஸலிலம் பிபாஸார்தித: |
கதாசிதபி பர்யடந் ஶஶவிஷாணமாஸாதயேத்
ந து ப்ரதிநிவிஷ்டமூர்க்கஜநசித்தமாராதயேத் ||'

என்று மஹாகவியால் அஶக்யமாகச் சொல்லப்பட்ட இம்மூர்க்க ஜந சித்த ஸமாதாநார்த்தமாக ப்ரமாண ப்ரதர்ஶநம் பண்ணுவதை விட்டு, நம் பரம வைதிகர்களுக்கு அர்ச்சாவதார தஶாராதந தத்ஸௌலப்யாதி விஷயங்களான இன்னும் சில ப்ரமாணங்களை ப்ரதர்ஶநம் பண்ணுகிறோம்.

(தொடரும்.)

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

தேவாலய தர்மம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந்
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

'தேவ' என்கிற சப்தமானது உயர்ந்த குணங்களைச் சொல்லுகிற 'திவ்' என்கிற தாதுவினால் உண்டாகிறபடியினால், அது 'ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூட:' என்றும், 'ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:' என்றும், 'விதாம தேவம் புவநேஶமீட்யம்' என்றும் வேதங்களில் சொல்லுகிறபடியே உயர்வற வுயர்நல முடையவனான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. இதை மயர்வற மதிநல மருளப்பெற்ற நம்மாழ்வாரும், "தேவ தேவனைத் தென்னிலங்கை யெரியெழச் செற்ற வில்லியை தேவர்க்கும் தேவா வோ" என்று அருளிச்செய்திருக்கிறார். இந்த 'தேவ' சப்தமானது தேவஜாதியைச் சொல்லும்பொழுது ஈஶ்வரனைப் போல ஸர்வ மேன்மைகளுக்கு இருப்பிட மல்லாவிட்டாலும், அம்மேன்மைகளுக்குள் சில மேன்மைகள் தேவதைகளிட மிருப்பதினால் கௌண வ்ருத்தியினால் தேவர்களையும் சொல்லுகிறது. ஆகவே தேவ சப்தத்திற்கு, ஸர்வ மேன்மைகளுக்கு மிருப்பிடமான ஸர்வேஶ்வரன் முக்யமான பொருளாகவும், சிற்சில மேன்மைகளையுடைய தேவஜாதிகள் கௌணமான பொருளாகவும் நிச்சயிக்கப்படுகிறார்கள்.

'ஆலய' சப்தம், அந்த ஸர்வேஶ்வரனும் மற்றைத் தேவ ஜாதிகளும் வஸிக்கு மிடத்தைச் சொல்லுகிறது. ஆனால், 'எஞ்ஞான்றும் எங்கு மொழிவற நிறைந்து நின்ற' என்கிறபடியே ஸர்வ லோகங்களையும் வ்யாபித்திருக்கிற ஸர்வேஶ்வரனுக்கு வாஸஸ்தாந மென்று ஒரு வஸ்து ஸம்பவிக்குமோ என்று சிலர்க்கு ஸந்தேஹ முண்டாகலாம். எங்கும் நிறைந்திருக்கிற விபுவான ஈஶ்வரனுக்கு வ்யாபகமான வாஸஸ்தாநம் ஸம்பவிக்காவிட்டாலும், அர்ச்சா விக்ரஹத்தோடு கூடின அவனுக்கு வாஸஸ்தாநம் ஸம்பவிக்கலாம்; ஆகையினால், இங்கு ஆலய சப்தம் ஆகம சாஸ்த்ரங்களில் சொல்லப்படும் க்ரமங்களை அநுஸரித்து நிர்மாணம் பண்ணப்பட்ட கோயில்கள் ஈஶ்வரனுடைய விக்ரஹத்திற்கு இருப்பிடமாக இருப்பதால் அவைகளைச் சொல்லுகிறது.

'தர்ம'மென்கிற சப்தமானது, அந்தத் தேவஸ்தாநங்களில் மனிதன் செய்யவேண்டியதாக ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கார்யங்களைச் சொல்லுகிறது. இவ்வுலகத்தில் ஒருவனால் செய்யப்படும் ஜபம் தபம் யாகம் முதலிய தர்மங்கள் பெரும்பாலும் செய்கிறவனுக்கு மாத்ரம் பேரின்பங்களை அளித்திடும். இந்தத் தேவாலய தர்மங்களோ வென்றால், தேவாலய மிருக்கிற தேசத்திற்கும் அத்தேசத் தரசனுக்கும்

ஸர்வாநிஷ்டங்களையும் போக்கி ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கின்றன. ஆனபடியினால், இத்தர்மம் மற்றைத் தர்மங்களைக் காட்டிலும் மிகவும் சிறந்ததாகும். ஆகையினால் அந்த விஷயங்களில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுகிறோம்.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஸ்ருஷ்டி காலத்தில் அநாதி காலமாக ஸம்ஸாரிகளாக இருக்கிற ஆத்மாக்களுக்கு, அந்தந்த ஜீவாத்மாக்கள் முன் ஜந்மங்களில் பண்ணின புண்ய பாபங்களை அநுஸரித்து, மூல ப்ரக்ருதி என்கிற த்ரவ்யத்தினால் செய்யப்பட்டவைகளான தேவதை, மனிதன், பசு, பக்ஷி, மரம் செடிகள் என்று நான்கு விதங்களான சரீரங்களைக் கொடுக்கிறான் என்கிற விஷயத்தை

" ஸஹஸ்ராக்ஷாயீஸ்ரஜதே விஶ்வமேதத் "

என்கிற வேதவாக்யமும்,

" மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஸ்ஸூயதே ஸசராசரம் |"

" ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந: |
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் "

என்கிற பகவத்கீதா வாக்யங்களும் சொல்லுகின்றன.

இந்த லோகத்தில் குயவன் மண்ணைக்கொண்டு சட்டி பானை முதலிய பாத்ரங்களைத் தேஹேந்த்ரிய வ்யாபாரங்களினால் செய்கிறதுபோலன்றிக்கே, ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தனான ஸ்ரீமந் நாராயணன், "ஞான மஃதேகொண் டெல்லாக் கருமங்களும் செய்" என்கிறபடியே தன்னுடைய ஸங்கல்பமாத்ரத்தினால் இவ்வுலகத்தை ஸ்ருஷ்டிக்கிறதாக ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஆனால் இவ்வுலகத்தை ஈஶ்வரன் ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுகிற விஷயத்தில் இக்காலத்திய சில நாகரிகர்களுக்கு நம்பிக்கை இல்லாதிருக்கலாம். அவர்களுக்கும் நம்பிக்கை உண்டாகும்படி முன்னோர்களான மஹர்ஷிகளால் சொல்லப்பட்டிருக்கும் சில வார்த்தைகளை இங்கு உதாஹரிக்கிறோம்.

தேவேந்த்ரனோடு யுத்தம்பண்ணித் தோற்றுப்போயிருந்த மஹாபலியை இந்த்ரன் பரிஹஸித்த ஸமயத்தில் ஜ்ஞாநவானான மஹாபலி சொன்னதாகப் பாரதத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:

" த்ருஶ்யதே ஹி யுவைவேஹ விநஶ்யந்வஸுமாநபி |
தரித்ரஶ்ச பரிக்லிஷ்ட: ஶதவர்ஷோ ஜராந்வித: ||"

[தநிகனான பாலன் இறந்துபோவதையும், மற்றொருவன் ஏழ்மையாலும் கிழத்தனத்தினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டு நெடுங்கால மிருப்பதையும் பார்க்கிறோம்.]

" கல்யாணீ ராஜபுத்ரீ ச ஸ்வரூபா ஶக்ர த்ருஶ்யதே |
லக்ஷணா விரூபா வா ஸுரூபா த்ருஶ்யதே பரா |
நைததஸ்மத்க்ருதம் ஶக்ர நைததஸ்மத்க்ருதம் க்ருதம் "

[அதிகமான அழகுள்ளவள் பிச்சை வாங்குவதையும், ஸாமுத்ரிக லக்ஷண மில்லாத குரூபியானவள் அதிக பாக்யசாலியாக இருப்பதையும் பார்க்கிறோம். இவர்கள் அப்படி இருக்கும்படி நீ செய்தாயா? அல்லது நான் செய்தேனா?] மற்றோரிடத்தில்:

“ ஸம்மத்யா ஜம்ரொ ந்ஸ்ஹம் ரெதொஷிதுஃஉவெதநு |
கெந யதெந ஜீவநம் ஸாதம் கவநாவஸ்யவி |
சுஹவாநாநி ஜீயதெ யத்ர ஸக்ஷாஸ்து ஸக்ஷிதாஃ |
தஸ்நிஹெவொதொ மஹதஃ கிஹாஹநிவ ஜீயதெ ”

[ஸ்த்ரீ புருஷர்களுடைய சேர்க்கையினால் ஸ்த்ரீயினுடைய வயிற்றில் வைக்கப்பட்ட ரேதஸ் என்கிற அறிவில்லாத ஓர் ஜல பிந்துவானது, யாருடைய முயற்சியினால் ஜீவித்திருந்து குழந்தையாகவும் ஜனிக்கின்றது? எந்த வயிற்றுக்குள் அந்நபானங்களும் மற்றும் பலவித கடினங்களான பதார்த்தங்களும் ஜாடராக்நியில் ஜரித்துப் போகின்றனவோ, அதே வயிற்றில் இந்த ரேதஸ் திவலை மட்டும் ஏன் ஜரித்துப் போகாமலிருக்கவேணும்?]

இந்தக் கார்யங்கள் மனிதனால் செய்யமுடியாதாகையினால், “யொ ஓ மஹமதஸ்யாவி வ்ருத்திம் கஸ்தவாநு ஷூஹஃ |” என்கிறபடியே கர்ப்பத்தி லிருக்கிற குழந்தையை ஜீவிக்கச்செய்வது முதலிய ஆஸ்சர்ய கார்யங்களை ஸர்வசக்தனான ஈஸ்வரன்தான் செய்யவேணுமென்று இந்த ஸ்லோகங்களைச் சொன்ன ரிஷியின் அபிப்ராயம்.

இந்த விஷயத்தில் அந்தந்த வஸ்து ஸ்வபாவம்தான் காரணம் என்று சிலர் சொல்வதுண்டு. அநேக வஸ்துக்களுடைய ஸ்வபாவங்கள் மாறுதல் அடைவதுபோல, ஏன் ஒரு வஸ்துவுக்கு மற்றொரு ஸ்வபாவம் உண்டாகக்கூடாது என்று கேட்டால் உத்தரம் சொல்ல வழியில்லை. ஆகையினால் காலம் ஸ்வபாவம் அத்ருஷ்டம் என்பனபோன்ற அறிவில்லாதனவும் சக்தியற்றவைகளுமான மற்றைக் காரணங்களைக் கல்பித்துச் சொல்வதைக்காட்டிலும், ஸர்வஜ்ஞனும் ஸர்வ சக்தியுள்ளவனுமிருக்கும் ஸர்வேஸ்வரன்தான் ஸர்வ கார்யங்களுக்கும் காரணமென்று வேதம் முதலிய சாஸ்த்ரங்கள் சொல்வதை அங்கீகரித்துச் சொல்வதே தரம். ஆதலின், அவனை ஆஸ்ரயித்து க்ஷேமத்தை அடைவதே புத்திமான்களுடைய க்ருத்யமாகும். இதைவிட்டு இங்கு நாஸ்திக வாதம் செய்கிறவர்கள் எவ்வளவு புத்திமான்களாக இருந்தாலும், தம்முடைய தேஹேந்த்ரியங்களைத் தாமே உண்டாக்கிக் கொண்டதாகச் சொல்ல முடியுமா? ஒருவனுக்குத் தன்னுடைய தேஹத்தை ஸ்ருஷ்டித்துக் கொள்ள ஸாமர்த்ய மிருந்தால்

“ கூஷெயூவஃ்ிணஜும் யஸூாணும் வஹிஸ்ஷைஜஸாவ்ருதஷ |
ஸீஹகஸம் நரநாரீணாம் விதஃஷாம் நரகஸ்தஷ ||”

என்கிறபடியே உள்ளே அசுத்த வஸ்துமயமாய், வெளியிலும் வேர்வை நாற்றத்துட னிருப்பதால் நரகதுல்யமாக வித்வான்களால் வெறுக்கப் படும் இந்தச் சரீரத்தைத் தான் தனக்கு ஸம்பாதித்துக்கொள்வனு?

“ந ம்ரியேத ந ஜீர்யேத ந க்லிஶ்யேத ந து:கித: |
நாஶ்ரயம் ப்ரதிபத்யேத யதி நோ பவேத் ||”

என்கிறபடியே தெய்வமில்லாம லிருந்தால் யாராவது இறந்துபோவார் களா? யாராவது கிழவர்களாக ஸம்மதிப்பார்களா? ஏதாவது ஒரு துக்கத்தை அநுபவிப்பார்களா? எல்லா மனிதர்களும் அவரவர்களுக்கு வேண்டிய போகங்களை ஸம்பாதித்துக்கொள்ள மாட்டார்களா?

இப்படி மனிதர்கள் ஸர்வ விஷயங்களிலும் ஸ்வாதந்த்ர்ய லேச மில்லாது ஈஸ்வரனுக்குப் பராதீநர்களாக இருப்பதினுலன்றே, நண்ணு தார் முறுவலிப்ப நல்லுற்றூர் கரைந்தேங்க எண்ணுருத் துயர்விளைக்கு மிந்த ஸம்ஸார ஸமுத்ரத்தில் அழுந்திக் கிடக்க இஷ்டமில்லாத விவேகி கள் ‘புகலொன்றில்லா வடியேன் உன்னடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே’ என்று அவன் திருவடிகளையே ஆஸ்ரயித்து உஜ்ஜீவிக்க ஆசைப்படுகிறது.

இது நிற்க: கீழே சொன்னபடியே தேவதை மனிதன் பசு பக்ஷி மரம் செடி என்று நான்கு வகையான வஸ்துக்களுக்குள், தேவதை என்கிற ஒருவகைதவிர மற்ற மூன்றுவகை வஸ்துக்களை இவ் வுலகத்தில் ப்ரத்யக்ஷமாக நாம் பார்க்கிறோம். அந்த மூன்று வகைகளுக் குள் மரம் செடி புல் பூண்டு முதலிய ஸ்தாவர வஸ்துக்கள் மிகவும் ஸ்வல்பமான அறிவுடன் மற்ற மூன்று வகைகளான திர்யக்குக்கள் மனி தர்கள் தேவதைகள் இவர்களுக்கு உபயோகப்படுவதால், ஸ்தாவர வகுப்பானது மிகவும் தாழ்ந்ததென்று சாஸ்த்ரங்களிலும் உலகத்திலும் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.

இதைத் தவிர, திர்யக்குகள் மனிதன் தேவன் என்கிற மூன்று வகுப்புகளுக்குள், திர்யக் என்று சொல்லப்படும் ஆடு மாடு பக்ஷிகள் கீழே சொல்லப்பட்ட மரம் செடிகளைக்காட்டிலும் கொஞ்சம் அதிக அறிவுள்ளவைகள். அவை மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் உபயோகப் படுவதால், மற்ற தேவன் மனிதன் என்கிற இரண்டு வகுப்புக்களைக் காட்டிலும் தாழ்ந்ததாகவே நிச்சயிக்கப்படுகின்றன. இந்தத் திர்யக் வகுப் பைக்காட்டிலும் மனிதன் என்கிற வகுப்பானது அதிகமான புத்தி சக்தியை உடையதாய், அவைகளையும் ரக்ஷிக்கும் சக்தியுடையதாய், ஈஸ் வரனுடைய ஆஜ்ஞாரூபங்களான சாஸ்த்ரங்களை அறிந்து அநுஷ்டித்து ஸ்வர்க்காதி போகாநுகூலமாக இருக்கையாலே இப்படிப்பட்ட ஸ்வபாவ மில்லாத ஸ்தாவரம் திர்யக்குக்களைக்காட்டிலும் மேன்மையுள்ளதாய், அந்தத் திர்யக்குக்களையும் தனக்காக உபயோகப்படுத்துவதாய் இருத்த லால் உயர்ந்ததாகிறது.

இந்த விஷயத்தை, ஒரு மனிதனைப் பார்த்து, ‘மரமே!’ அல்லது ‘மாடே!’ என்று சொன்னுல், சொன்னவுடன் அவனுக்குக் கோபம்

வருவதாலும் நாம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு இருக்கிற மநுஷ்ய வகுப்பைக்காட்டிலும் தேவதை என்கிற வகுப்பானது அதிக புத்தி சக்தி முதலிய ஆத்மகுணங்களோடும் தேக குணங்களோடும் மனிதர்களை ரக்ஷிக்கக்கூடிய சக்தியுடனும் கூடியிருப்பதாலும், மனிதர்கள் ஆடுமாடுகளைத் தங்களுடைய ஸௌக்யத்திற்காக வைத்துக்கொள்வதுபோல 'யதா பஶவ ஏவம் ஸ தேவாநாம்' என்கிற ஶ்ருதியின்படியே தேவதைகளுடைய ஸௌக்யத்திற்காகவே மனிதஜாதி ஸ்ருஷ்டிக்கப்பட்டதாக மற்றும் பல சாஸ்த்ரங்கள் சொல்வதாலும், மனிதர்களுக்கு ஆடுமாடுகள் உபகாரம் செய்வதுபோல தேவர்களுடைய உபகாரார்த்தமாக மனிதனிருப்பதாலும், தேவஜாதியானது உயர்ந்ததாக இருக்கிறது.

இந்தத் தேவதைகளுடைய மேன்மையானது பாரதம் ஆரண்ய பர்வம்: அத். 217-ல் பின்வருமாறு, விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"உபரிஷ்டாதஸௌ லோகோ யோ(அ)யம் ஸ்வரிதி ஸம்ஜ்ஞித: |
நாதப்ததபஸ: பும்ஸோ நாமஹாயஜ்ஞயாஜின: ||
நாந்ருதா நாஸ்திகாஶ்சைவ தத்ர கச்சந்தி முத்கல |
தர்மாத்மானோ ஜிதாத்மான: ஶாந்தா தாந்தா விமத்ஸரா: ||
தானதர்மரதாஶ்சைவ ஶூராஶ்சாஹவலக்ஷணா: |
தத்ர கச்சந்தி தர்மாக்ர்யம் க்ருத்வா ஶமதமாத்மகம் ||
த்ரயஸ்த்ரிம்ஶத் ஸஹஸ்ராணி யோஜனானி ஹிரண்மய: |
மேரு: பர்வதராட் யத்ர தேவோத்யானானி முத்கல ||
நந்தனாதீனி புண்யானி விஹாரா: புண்யகர்மணாம் |
ந க்ஷுத்பிபாஸே ந க்லானி: ந ஶீதோஷ்ணே பயம் ததா ||
பீபத்ஸமஶுபம் வாபி தத்ர கிஞ்சின்ன வித்யதே |
ந ஶோகோ ந ஜரா தத்ர நாயாஸபரிதேவனே ||
ஸுக்ருதைஸ்தத்ர புருஷாஸ்ஸம்பவந்த்யாத்மகர்மபி: |
தைஜஸானி ஶரீராணி பவந்த்யத்ரோபபத்யதாம் ||
கர்மஜான்யேவ மௌத்கல்ய ந மாத்ருபித்ருஜான்யுத |
ந ஸம்ஸ்வேதோ ந தௌர்கந்த்யம் புரீஷம் மூத்ரமேவ வா ||
மனோஜ்ஞாஸ்ஸர்வதோ கந்தாஸ்ஸுகஸ்பர்ஶாஶ்ச ஸர்வஶ: |
ந ம்லாயந்தி ஸ்ரஜஸ்தேஷாம் திவ்யகந்தா மனோரமா: ||
ஸுகம் ஸமர்ஜிதஸ்தத்ர வர்த்தயந்தே மஹாமுனே |"

மஹாமேரு என்கிற தங்கமயமான மலையினுடைய மேல்பாகமான மிகவும் விஸ்தாரமான இடத்திற்கு ஸ்வர்க்கம் என்று பெயர். அந்த லோகத்திற்குப் பாபம் செய்தவர்கள் போகமுடியாது; தர்மம் செய்தவர்கள்தான் அங்கு வஸிக்கலாம். அங்கு வஸிப்பவர்களே தேவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அங்கிருக்கிற தேவர்களுக்குப்

பசி இல்லை; தாகமில்லை; ஶ்ரமமில்லை; அங்குக் குளிர் இல்லை; வெயி லில்லை; சத்ருபய மில்லை; கெட்ட வஸ்துக்க ளில்லை; துக்கமில்லை; அழுகை யில்லை; அங்கிருக்கிறவர்களுடைய தேகமானது தாய்தகப்பனுடைய சுக்லசோணிதத்தினால் உண்டானதன்று; புண்ய கர்மத்தினாலுண்டானது. அங்கு வேர்வை இல்லை; துர்க்கந்த மில்லை; மலமில்லை; மூத்ரமில்லை; அங்குப் புஷ்பமாலை வாடுகிறதில்லை; எக்காலத்திலும் உயர்ந்த வாஸனை யோடும் ம்ருதுவான ஸ்பர்சங்களோடும் அவர்கள் ஸுகாநுபவத்தோ டேயே இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதால், அந்தத் தேவஜாதி மனிதனைக்காட்டிலும் மிகவும் உயர்ந்ததாகும். ஆகவே: மனிதன், மரம் செடி ஆடுமாடுகளைத் தனது ஸௌகர்யத்துக்காக அவை களுக்கு ஆஹாராதிகளைக் கொடுத்துப் போஷிப்பதுபோல, தேவஜாதியும் மனித ஜாதியை 'யதா பஶவஸ்ஸேவம் ஸ தேவானாம்' என்கிறபடியே தங்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்துப் போஷிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டதாகிறது.

இந்த விஷயமானது பகவத்கீதை 3-வது அத்யாயத்தில்.

"𑌸𑌹 𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌮𑍇𑌷𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ॥
𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌯𑌤𑌾𑌨𑍇𑌨 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 ॥
𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍈𑌰𑍍𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍍 𑌅𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍈𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌏𑌵 𑌸𑌃 ॥"

என்கிற ஶ்லோகங்களினால், ஸர்வேஶ்வரன் இவ்வுலகை ஸ்ருஷ்டிக்கும் பொழுது தேவர்களுடைய ஆராதநத்திற்காக யஜ்ஞம் முதலிய சில கார்யங்களையும் மனிதர்களையும் ஸ்ருஷ்டித்து மனிதர்களைப் பார்த்து, "நீங்கள் இந்த யாகாதிகளால் தேவர்களைப் பூஜியுங்கள்; அவர்களும் தங்களுடைய ஆராதநம் செய்வதற்காக ஸர்வஸுகஹேதுவான மழை யையும் மற்றும் வேண்டிய இஷ்ட வஸ்துக்களையும் உங்களுக்குக் கொடுக் கட்டும்" என்றார். இப்படித் தங்களை உபசரிப்பதற்காகத் தேவர்களால் கொடுக்கப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு எந்த மனிதன் அவர்களை ஆரா திக்கவில்லையோ, அவன் திருடனாகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருட்டுத்தனமாவது: ஒருவன் தன்னுடைய போகத்திற்காக வைத்திருக் கும் வஸ்துவை மற்றொருவன் தன்னுடைய போகத்திற்காக உபயோகப் படுத்த நினைப்பது. இங்குத் தேவர்கள் தங்களுடைய பூஜநத்துக்காகக் கொடுத்த வஸ்துக்களைக்கொண்டு மனிதன் அவர்களைப் பூஜிக்காமல் தன்னுடைய போகத்திற்காக உபயோகப்படுத்துவதால் அது திருட் டாகிறது. இதனால் மனிதனாகப் பிறந்தவன் தேவர்களைப் பூஜிக்கவேண் டியது அவஶ்யமென்றும், அந்தப் பூஜைகளை மனிதன் செய்யாமல்போனால் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாததினால்

“ 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌯𑌦𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥”

என்கிறபடியே செய்யவேண்டிய கடமையான தர்மங்களை விட்டவனுக்கு மற்றொரு புண்யகர்மத்தைச் செய்ய யோக்யதை இல்லாமற்போவதோடு, திருட்டுத்தனத்தினால் ஏற்படக்கூடிய நரகமும் ஸம்பவிக்குமென்று சொல்லப்பட்டதாகிறது. ஆகவே மனிதனாகப் பிறந்தவன் தான் க்ஷேமமாக இருக்க விரும்பினால், தேவர்களைப் பூஜித்தே தீரவேண்டுமென்றும், தேவ பூஜையைத் தவறினால் நரகம் வருமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படிச் சொல்லப்பட்ட தேவதைகளுடைய பூஜையானது நித்யமென்றும் காம்யமென்றும் இரண்டுவிதமாக இருக்கும். அவற்றுள் நித்ய கர்மமாவது: அந்தந்த ஜாதிகளைக் குறித்து ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படும் விதிவாக்யங்களில் செய்யவேண்டியதற்குக் காரணத்தைச் சொல்லாமல் ‘தினந்தோறும் செய்யவேண்டும்; எப்பொழுதும் என்றும் வது விடக்கூடாது’ இவைபோன்ற சப்தங்களிருந்தால் அது நித்யகர்மா என்று சொல்லப்படும். இந்த நித்யகர்மங்களைச் செய்ததற்காக ஒரு பயனும் கிடையாது. ஆனால் செய்யாவிட்டால் சிக்ஷையுண்டு.

காம்ய கர்மமாவது: ஸ்வர்க்க ஸுகம் வேண்டுமானால் ஜ்யோதிஷ்டோமம் என்கிற யாகத்தைச் செய்யவேண்டும் என்பவை போன்ற விதிகளால் சொல்லப்படுமவை. காம்ய கர்மங்களைச் செய்தால் பலனுண்டு; செய்யாவிட்டால் குற்றமில்லை. கீழே குறிப்பிட்ட கீதையிலும்:

“ 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃 ।
𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌘𑌂 𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇 𑌪𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ॥”

என்கிற மேல் ஶ்லோகத்திலும் மனிதன் தினந்தோறும் அந்நம் முதலிய வஸ்துக்கள் தேவதைகளுடைய பூஜைக்காகவே தேவர்களால் கொடுக்கப்பட்டதால், அந்த அந்நத்தைச் சமைக்கும்பொழுதே தேவர்களுடைய பூஜைக்கென்றே சமைத்து, அந்த அந்நத்தை ஸர்வேஶ்வரனுக்கு நிவேதநம் பண்ணி, பிறகு சாஸ்த்ரத்தில் சொல்லுகிறபடி அந்தந்த தேவதைகளுக்கு ஷ அந்நத்தை ஹோமம் பலிதாநம் மூலமாகக் கொடுத்துவிட்டு, அதினுடைய மிச்சமான அந்நத்தை மனிதன் சாப்பிடவேணும். இப்படி தேவதைகளுக்கென்று சமைக்காமல் தனக்கென்று ஒரு மனிதன் சமைத்துச் சாப்பிட்டால், அதனால் மஹத்தான பாபமுண்டாகும் என்று சொல்லுகிறதும் நித்யகர்ம விஷயம். ஆகையினால்தான் செய்யாவிட்டால் நரகத்துக்குக் காரணமான பாபமுண்டாகும் என்கிறது.

ஆதலால் ஏதாவது அந்நதாநம் முதலிய ஒரு புண்ய கார்யத்தை ஒரு மனிதன் செய்ய இஷ்டப்பட்டால், அவன் ஜாதிக்கு அநுகுணங்களாக ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட நித்ய கர்மங்களைச் செய்தாலொழிய அவனால் செய்யப்படும் அந்நதாநத்துக்குப் பயன் கிடையாது என்பது இந்தக் கீதையின் அபிப்ராயம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ வரவர முநயே நம:

பாசுரங்களின் பகுதி

[வித்வாந் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.]

2. உவந்த வுள்ளத்த னாயுல கமளந் தண்டமுற
நிவந்த நீண்முடி யனன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக் காகுத் தன்கடி யார்பொழி லரங்கத் தம்மானரைச்
சிவந்த வாடையின் மேற்சென்ற தாமென் சிந்தனையே.

உவந்த உள்ளத்தனாய்—'செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்' என்றும், 'ப்ரணவாகாரம் ரங்கம்' என்றும் சொல்லுகிறபடி, முதல் மூன்று பாசுரங்களும் ப்ரணவாவயவாக்ஷரங்களோடு தொடங்குகின்றன. (2) பாதம் நீண்டு வந்ததற்குக் காரணம் உள்ள முவந்ததே என்கிறார். திருவடியின் ஸ்வபாவம் 'ஒரெண்டானு மின்றியே வந்தியலுமாறு உண்டானை உலகேழும் ஓர் மூவடி கொண்டானை' என்றபடி நாம் எண்ணமலும் அநுக்ரஹிப்பதாம். திருவடியின் ஸ்பர்ஶத்தை எல்லாருடைய ஶிரஸ்ஸுக்கும் அளித்தது உலகளந்த த்ரிவிக்ரமர். 'என் கண்ணினிடம் நீண்டு வந்தது பெரிதோ அந்த த்ரிவிக்ரமப் பெருமானுக்கு' என்று திருவுல களந்தருளின வ்ருத்தாந்தத்தை நினைத்து ஈடுபடுகிறார். வேதம் டிண்டிமமாக அந்த யஶஸ்ஸைப் பரப்பியதென்பர். வேதம் பாடி உத்கோஷிக்கும் அந்த யஶஸ்ஸைத் தாமும் பாடுகிறார். 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' என்று கும்மியடித்துப் பிராட்டிமாரும் ஆசைப்பட்டுப் பாடும் யஶஸ்ஸு. (3) 'கண்ணுள்ளே நிற்கும்' என்ற 'பொருமாநீள்படை'த் திருவாய்மொழிப் பாசுரம் மனத்திற்கு வந்தது. அதை முதல் பாசுரத்தில் பேசுகிறார். 'திருமா நீள்கழ லேழுலகும் தொழ ஒரு மாணிக் குறளாகி நிமிர்ந்த அக்கருமாணிக்கம் என் கண்ணுள தாகுமே' என்ற முன் பாசுரமும் சேர்ந்து இங்கே திருவுள்ளத்தி லோடுகிறது. 'முதித ஹ்ருதயா' என்று தனியனிற் கூறிய இவர் உவப்பைப் பிள்ளைலோகம் ஜீயர் 'உவந்த உள்ளத்தரானர்' என்று இந்த சப்தங்களால் வர்ணித்தார். பெருமாள் உள்ள முவந்ததிலும் மேற்பட்ட ஹர்ஷமுண்டோ இவருக்கு? பெருமாள் உவப்பு இவர் நெஞ்சில் ப்ரதிபிம்பிதமாகும். 'ஹ்ருத: ஹ்ருணாதி'.

உலகமளந்து—(1) இப்பொழுது பள்ளிகொண்ட பெருமாளே அன்று த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகளந்தவன் என்கிறார். 'அன்று' என்பதை இங்கும் சேர்த்துக்கொள்ளவேணும். 'காலே ப்ரபுத்தே ப்ரபுத்த மதிம்' என்றதும், இன்று தூங்கும் பெருமாளும் காலம் வந்தால் தூத்யம்

செய்யவும் ஓடுபவர் என்றதைக் காட்டிற்று. 'வஸிஷ்ட சண்டாள விபாகம் பாராதே எல்லார் தலையிலு மொக்கத் திருவடிகளை வைத்தபடி' என்று நாயனர். நீசனுகிய என்னிடம் திருவடி நீண்டது த்ரிவிக்ரம ஸ்வபாவம்; த்ரிவிக்ரமர் தாளின் நீதி; வாமனட்டு நீதிமட்டு மல்ல.

அண்டமுற நிவந்த நீண்முடியன்—(1) திருவடி நீண்டு பரவி உயர வோங்கி நிமிர்ந்தது. திருமுடியும் நிவந்து நீண்டு அண்டமுற ஓங்கிற்று. 'ஆஜாநுபாஹு நிஹூபிய ஹரிம் ஸயாநம்' என்றபடி பள்ளிகொண்ட பெருமாளைத் திருவடிமுதல் திருமுடிவரையில் அநுபவித்துவந்தவர், அவரையே த்ரிவிக்ரமராக அநுபவிக்கையில், அப்படியே திருவடிமுதல் திருமுடி பர்யந்தம் நின்ற திருக்கோலமாக அநுபவிக்கிருர். (2)'நிவந்த—பூவலர்ந்தாப்போலே' என்று பிள்ளை.

அன்று நேர்ந்த நிசாசரரை—உடனே ராமாவதாரமாகப் பெருமாளை அநுபவிக்கிருர். 'த்ரிவிக்ரமாவதாரத்தில் நிஶாசரனுகிய மாவலியை வெங்கணையால் கொல்லவில்லை; ராமாவதாரத்தில்தான் அது உண்டு' என்று வேற்றுமையைக் காட்ட 'அன்று' என்று ராமாவதார காலத்தைப் பேசுகிருர். (2) 'நேர்ந்த'-அவர்களாக வந்து எதிர்த்தார்கள். (3) அண்டமுற -'அண்டம் மோழையெழ' என்பதைப் பிள்ளை உதாஹரித்தார். அவர்களையும் காப்பாற்றவேண்டுமென்று கூடியவரையில் ஸாமோபாயத்தை நாடினர். அவர்கள் இணங்கவில்லை.

கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்—கணை வெங்கணை. அது பொல்லாதது. அவருள்ளம் உவந்ததே; அருள் நிரம்பியதே. 'உவந்த உள்ளத்தனய்' என்பது காகுத்தனேடும் அந்வயிக்கும். ராவண கும்பகர்ணரை மாளச் செய்ததும் கருணையே; உள்ளத்தின் உவப்பே. சாபத்தால் தீரவேண்டிய மூன்று ஜந்மங்களில் இரண்டு கழிவது அவர்களுக்கு ஹிதமே. 'பொருமா நீள்படை ஆழி சங்கத்தொடு' என்றபடி திருவாயுதங்களுக்கும் கருணையும் ராகமும் உண்டு. வெங்கணையும் ராகத்தால் அவர்களைக் கவர்ந்தது என்கிருர். 'கவர்ந்தது' என்னும் பதம் ராகத்தையும் கருணையையும் காட்டுகிறது.

கடியார்பொழி லரங்கத்தம்மான்—(1) அரங்கத்தில் சோலைகளின் புஷ்பங்களைக் கந்தவஹ மென்னும் காற்று இவருக்கு என்றும் அநுபவிப்பித்தது. 'கடி' என்பது மணத்தைச் சொல்லுவதோடு 'படிச்சோதி யாடையொடும் பல்கலனய் நின்பைம்பொற் கடிச்சோதி கலந்ததுவோ' என்ற முடிச்சோதி யநுபவத்தின் நினைவையும் காட்டும். 'அரைச் சிவந்த வாடை' என்று 'அரை' என்னும் பத மிருந்தாலும் 'கடி' என்ற சப்தமாத்ரத்தால் அரை ஆடையின் அநுபவத்தில் நம்மாழ்வாருடைய விசித்ரமான அநுபவத்தின் நினைவையும் உட்கொள்ளும். (3) 'திருவுலகளந்தருளின இடமே பிடித்து அடியொற்றி ராவணவதம் பண்ணித் தெற்குத் திருவாசலாலே புகுந்து சாய்ந்தருளினன். இன்னமும் வேர்ப்பு

14 MAY 1942
MADRAS

அடங்கிற்றில்லை. திருச்சோலையில் பரிமளம் வி[illegible]ரோப சாரமானபடி' என்று பிள்ளை.

அரைச் சிவந்த ஆடையின்மேல்—(1) ஆடையின் சிவப்பு இவரிடம் ராகத்தின் மிகுதியாலே வந்ததுபோலும். ஆடையத்தனை ராகத்தைக் காட்டுகையில் தன் சிந்தனை எப்படி அதன்மேல் செல்லாமலிருக்குமென்கிறார். 'க்ருதே ச ப்ரதிகர்தவ்யம் ஏஷ தர்ம: ஸநாதந:' என்பர். ஸ்நேஹத்திற்கு ஸ்நேஹரூபமான ப்ரதிக்ருதி இல்லாமற்போகலாமோ? 'க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:' என்பரே. (2) 'தஸ்ய யதா மாஹாரஜநம் வாஸ:' என்று நேதி நேதி ப்ரகரணத்தில் திவ்ய மங்கள விக்ரஹத்திலுள்ள பீதாம்பரத்தை ஶ்ருதி அநுபவித்தது. 'மாஹாரஜநம் வாஸ:' என்றதைச் 'சிவந்த ஆடை' என்று வர்ணிக்கிறார். இது 'பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத:' என்ற கோவலன் நினைவைக் காட்டும். காகுத்தனுக்குப் பின்பு கோவலன் அநுபவம். 'க்ஷௌமே ஶ்லிஷ்டம் கிமேவ' என்று ஶ்ரோபாநத்தில் சிவந்த ஆடை ராகத்தோடு திருத்துடைகளை யணைந்ததும் வர்ணிக்கப்பட்டது. (3) 'செய்ய கார் முகில் திருமேனிக்குப் பரபாகமான திருப் பீதாம்பரம்' என்று பிள்ளை. 'ஸர்வ கந்த வஸ்து கண்வளர்ந்தருளுகையாலே கடியார் பொழிலாயிருக்குமிறே' என்று நாயனார்.

சென்றதாம் என் சிந்தனையே—(1) எனக்கு என் நெஞ்சினால் ஸ்பர்ஶிக்கவும் அச்சமே. ஆயினும் என் மநஸ்—என் சிந்தனை—என்னை யறியாமலே பாய்ந்து சென்று விட்டது. சென்ற பிறகு தான் எனக்குத் தெரிகிற தென்பதை, 'சென்றதாம்' என்பதால் காட்டுகிறார். (2) 'என் சிந்தனைமட்டுமே சென்றது, நான் அணுகவில்லை' என்று தன் அச்சத்தை (நைச்யத்தை) அநுஸந்திக்கிறார். (3) இங்கும் ஒரு ஸந்தி ரஸத்தின் அநுபவம். ஸந்த்யாகாலம், இருளும் ஸந்த்யாராகச் சிவப்பும் கலந்ததாக இருக்கும். காரிருள் திருமேனியில் சிவந்த ஆடை பரவியிருப்பதும் ஒரு ஸந்த்யாநுபவமாகும்.

3. மந்தி பாய்வட வேங்கட மாமலை வானவர்கள்
சந்தி செய்யநின் றானரங் கத்தர வின்னணையான்
அந்திபோனிறத் தாடை யும்மதன் மேல யனைப்ப டைத்ததோரெழில்
உந்தி மேலதன் றோவடி யேனுள்ளத் தின்னுயிரே.

மந்திபாய் வடவேங்கட மாமலை—என் மனம் நான் அறியாமலே எம்பெருமானுடைய சிவந்த வாடையின்மேல் பாய்ந்துவிட்டது என்றார். மனம் குரங்குபோன்றது என்று கருத்து. வடவேங்கட மாமலையில் மந்தி பாய்வதுபோல, இப்பச்சை மாமலையின்பேரிலுள்ள சிவந்த வாடையின்மேல் என் மனக்குரங்கு பாய்ந்து சென்றுவிட்டது என்று ரஸம்.

'வாநராணாம் நராணாம் ச கத²மாஸீத் ஸமாக³ம:' [வாநரருக்கும் நரருக்கும் எப்படி ஸமாகமம் (ஸந்தி) நேர்ந்தது?] என்று பிராட்டி ஆச்சரியப்பட்டு வினவினள். மந்திகள் காகுத்தனுகிய வேங்கடவனைத் தொழ விரைந்து பாய்கின்றனபோலும். அஞ்ஜநா தேவிக்கு அருள்புரிந்ததால் அஞ்ஜநாத்ரி என்று திருநாமம். வாநர மந்திகளுக்குக் கிடைக்கும் ஸந்தி நரனுகிய இவருக்கும் கிடைப்பது பொருந்தலாம். வடவேங்கடமே தென்னரங்கம். வடவேங்கட மாமலையி லுள்ளவன் அரங்கத்தரவினணையான். நின்ற திருக்கோலம் ஶயநத் திருக்கோலம் என்னும் அவஸ்தைகளால் பரமாத்மாவுக்குப் பேதமில்லை; அவஸ்தா த்ரயங்களாலும் வடக்கு தெற்கு என்பதாலும் பேதமில்லை. ஸகல பேதங்களும் விரோதமன்றியில் ஒன்ருக ஸந்தித்து ஸமரஸம் அநுபவிக்கும் ஸ்தலம்.

வானவர்கள் சந்தி செய்ய நின்ருன்—'கண்ணுவான் என்றும் மண்ணேர் விண்ணேர்க்குத் தண்ணர் வேங்கட விண்ணேர் வெற்பனே' 'ஶாஸ்த்ர சக்ஷுஷ: ஸூரய:' ஸூரிகளுக்குக் கண். கண்ணில்லாமல் எப்படிப் பார்ப்பார்கள்? 'ஶாஸ்த்ர சக்ஷுஷ:' என்றபடி பார்ப்பதற்கு வேண்டிய கண்ணினிடம் வந்தார்கள்போலும். மண்ணேர்க்கும் விண்ணேர்க்கும் எத்தனை தாரதம்ய மிருந்தாலும் அவர்களுக்கு வேங்கடவன் ஸந்நிதியில் ஸந்தி: தாரதம்ய மற்ற ஸந்தி. மண்ணேரான நரருடன் மந்திகளுக்கும் ஸந்தி. வெற்புமட்டும் விண்ணேர் வெற்பு; பரமபதமே. வேங்கடமாகிய பரமபதத்தில் மண்ணேர்க்கும் விண்ணேர்க்கும் ஸந்தி. இப்படிப்பட்ட ஸந்திரஸத்தில் ஆசைப்பட்டே பரமபதம் வேங்கட வெற்பு ரூபமாக இறங்கிற்று. பரமபதநாதனும் வேங்கடவனுக இறங்கினுன். மண்ணேர் விண்ணேர் ஸந்தி; மந்திகள் ஸந்தி; இத்தனையும் போதாமல் இன்று எனக்கும் தன் ஸந்நிதி ரஸம் கிடைக்க இங்கு ஓர் ஸந்தி செய்தான் அரங்கத்தரவினணையான்.

அரங்கத்தரவி னணையான்—நின்ருன் அரங்கத்தரவி னணையான். அரங்கத்தரவில் பள்ளிகொண்டவனே வேங்கட மாமலையில் நிற்பவன் என்கிற ரஸத்தை 'நின்ருன்' என்பதால் ஸூசிப்பிக்கிருர். மேலுக்குப் பார்த்தால் இரண்டு திவ்ய தேஶங்களும் ஒன்றேயென்று சொல்வதற்கு எல்லாம் விரோதமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிருர். அவன் மாமலையி லுள்ளான்—இவன் அந்தணீ ரரங்கத்தி லுள்ளான்; அவன் மாமலை மேல் நின்ருன்—இவன் அரவினணைத் துயில்வான்; அவன் மேவியது வடதேஶம்—இவன் மன்னியது தென்தேஶம். மலையும் அரவே என்று விரோத ஸந்தி (ஸமாதாநம்). 'ந ச ஸூர்யம் நாபி சாபரம்'. கிழக்கு மேற்கு என்கிற திக்கு பேதமில்லை. 'நித்³ராவஸி ஜாமயந்யா' 'நித்³ராம் நிவிஶஜமதீரக்ஷணே ஜாமராகே²' என்றபடி தூக்கம் விழிப்பு என்ற பேதமுமில்லை. உறக்கமும் விழிப்பே. மாணிக் குறளனுன

வாமனனே த்ரிவிக்ரமனுக அண்டமுற நிவந்த நீண்முடியன் என்பதில் ஐய முண்டோ? அதுபோலவே மாமலையில் நிற்பவனே அரங்கத் தரவினணை யான் என்பதிலும் ஐயமில்லை என்று காட்ட அதை முதலில் இங்கே யெடுத்தது. இந்த அபேதத்திற்கு அது ஏற்ற த்ருஷ்டாந்தம். மென் மையான பாம்பணையும் கடிந கடிநமான மாமலையும் ஒன்றே; இரண் டும் ஶேஷனே, ஶேஷாத்ரியே ஶேஷஶயநம்.

அந்திபோல் நிறத்தாடையும்—ஸந்த்யாராக ரஞ்ஜிதமாக வுள்ளது ஆடை. அந்தி ஓர் ஸந்தி; பகலுக்கும் இரவுக்கும் ஸந்தி. ஸகல விரோதங்களையும் ஸந்தி செய்து ந்ருஸிம்ஹாவதாரத்தோடு அவயவங் களின் அநுபவத்தை எட்டாம் பாட்டில் முடிக்கிறுர். இவ்வாடை பகவா னுக்கு அஸாதாரணம். மற்றோர் மூர்த்தி திகம்பரர். பீதாம்பரத்தால் திகம்பர வ்யாவ்ருத்தி. அயனைப் படைத்த உந்தியாலும் வ்யாவ்ருத்தி. பீதாம்பரத்தை ஸ்ரீஶங்கரரும் தனி ஶ்லோகத்தால் வர்ணித்து அதில் ஈடுபட்டார். ஆடை உந்திவரையில் வந்தது. 'ஓரோர் அவயவத்திலேயே கண் புதைந்து விடுகிறது; மேல் செல்ல முடியவில்லை' என்றுன் பிராட்டி யிடம் இருபது கண்படைத்த ராவணன். 'எல்லா அவயவங்களையும் சேர்த்து அகண்டத் திருமேனியை எப்படி அநுபவிப்பதென்று அச்சப் படாதே; மனமே! ஒவ்வோர் அவயவமும் அடுத்த அவயவங்களோடு ஸுஶ்லிஷ்டமாக ஸந்தித்திருப்பதால் அந்த ஸந்தியான ஸுஶ்லேஷம் ஸௌப்ராத்ருத்வத்தால்போல அழைத்துப்போகும். லாவண்ய மென் னும் ஸமுதாய ஶோபைமேல்மேல் இழுத்துப்போகும்' என்றுர் பட் டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில். ஸோபாநத்தில் இது ப்ரதி ஶ்லோகத்திலும் அழகாகக் காட்டப்பட்டது. 'விதூாகாராம் கடகாவிஹி:'. திருவடி யில் வீசியுள்ள கடக காந்திகள் ஜங்கையை ஸேவிக்க இழுத்துப்போகின் றன. திருவடிக்கும் ஜங்கைக்கும் ஸந்தியிலுள்ள கடகங்கள் வடநை செய்கின்றன. 'ஜாநுஜ்ஞாயாதிமண ஸஹமாழ' என்று ஜங்கைக்கும் திருத்துடைக்கும் ஸந்தியான ஜாநுக்களின் காந்தி மேலே இழுக்கிறது. 'ந்யம்வஞ்சாம்வீகிரணாவிரம் ஊராயாழ்ம்' என்ற மேலே நாபீ தேஶத்திலுள்ள அரைஞாண் மாலையின் காந்திகள் திருத்துடையில் வீசி மனக்கண்ணை மேலே யிழுத்துப் போகின்றன. ஸோபாந வ்யாக்யாநத் தில் இதை விஸ்தரித்துள்ளோம். அவயவங்களின் ஸந்திகளும் இங்கு மிக ப்ரசுரமாயுள்ள ஸந்தி ரஸாநுபவத்தில் சேரும். முதல் பாசுரத்தில் அநு பவித்த திருக்கமல பாதத்தை இரண்டாம் பாசுரத்தில் முதலில் அநு பவித்து, அத்தோடு சேர்த்து அரைச் சிவந்த வாடையை அநுபவித்தார். மூன்றும் பாட்டில் அரைச் சிவந்த ஆடையின் அநுபவத்தை அநுவதித்து, அத்தோடு சேர்த்து அதன் மேலுள்ள உந்தியை அநுபவிக்கிறுர். ஆடையில் மறைந்து ஆடையின் ஸம்பந்தத்துடன் ஆஶ்லிஷ்டமான ஜங்கை துடை இவற்றின் அநுபவமும் அந்தர்க்கத மென்பது ஸோபாநத்தில்

அந்த அவயவங்களை ஆடையால் ஆஶ்லிஷ்டமாக வர்ணித்துக் காட்டப் பட்டது.

அதன்மேல் அயனைப் படைத்ததோ ரேழில் உந்தி—அயனைப் படைத்தது உந்திக் கமலம். அயன் என்பது ஜாத்யேகவசநம். 'நவ்ருதீதா: விதாஹோ:' என்றபடி கடலெக்கலின் நுண்மணலிற் பலர் கழிந்த அயன்களென்பது, ஸோபாநத்தில் 'நாஸீகெநு ஸூசித ரஜஸா வெஷவெஸா ஜிஜிஹ்ரோணா' என்று விளக்கப்பட்டது. அரங்கர் நாபீபத்மம் அயனைப் படைத்தது, அயனைக்கொண்டு ஈஶ்வரனைப் படைப் பித்து, 'நாபீ கமலமே மற்ற மூர்த்திகள் உமக்கு நியாம்யமாக உட்பட்டவ ரென்று ஸித்தாந்தம் செய்து கொடுக்கிறது' என்ற பட்டர் அநுபவ மும் இந்த ரஸத்தை விளக்குகிறது. இந்த எழிலை 'ரஜோ ராவத ஹூதிஷ்ருதி ஸஹவஸீ' என்று ஸோபாநம் அநுபவித்தது.

உந்திமேலதன்றோ—(1) அயன் முதலியவரைப் படைத்த உந்தி மேலதன்றோ? 'ஸர்வோத்தம மன்றோ?' 'ஸர்வஸ்மாத்பர மன்றோ?' என்று ஓர் வண்ண வாக்யமுமாகும். (2) ஆடைமேல் உந்தி-உந்திமேல் என்னுள்ளத்தின் உயிர்-என்று மேல்மேல் க்ரமம். என் உள்ளமும் திருமேனியில் ஓர் அவயவமாகக் கலந்துவிட்டது. யோகத்தால் அவிபாக மடைந்துவிட்டது. (3) உந்தி திருமேனியின் மத்யத்தி லுள்ளது. அது ஓர் நடு ஸந்தி. (4) மத்யஸ்தமான உந்தி, 'மத்யஸ்தமாக இருந்து பக்ஷபாத மன்றியில் 'மற்றவருக்குப் பித்ரு பிதாமஹர் பகவான்; அவ ரால் மற்றவர் ஸ்ருஜ்யர்' என்று காட்டி விஷ்ணுவின் பரத்வத்தை ஸித் தாந்தப் படுத்துகிறதென்று க்ருஜ்ஞதா காஷ்டையால் 'உந்திமேல தன்றோ அடியே னுள்ளத் தின்னுயிரே' என்கிறார்.

அடியே னுள்ளத் தின்னுயிரே—'அடியேன்' என்று திருவடி யநு பவத்தையும் சேர்த்து உந்தி யநுபவத்தைத் தாரணை செய்கிறார். ஓரோர் அவயவமாக த்யாநம் செய்து, அதைத் தாரணைசெய்துகொண்டே மேல் அவயவங்களில் க்ரமேண த்யாநம் செய்து அகண்டத் திரு மேனியை முடிவில் சேர்த்து த்யாநம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ சுகர் காட்டிய முறையை அநுஸரிக்கிறார். 'ஜிதம் ஜிதம் யாரணயா', என் ஹ்ருதயத்திலுள்ள ஆத்மா உந்தியின்மேல் மக்நமாய் இன்புறுகிறது. உந்திக்குள் சென்றால், அச்சுழலிலிருந்து (ஆவர்த்தத்திலிருந்து) வெளியே வருவது துஸ்ஸாத்யமாகும். 'ஙஷ்ருதி நாஸிம்' என்று ஸோபாநம் மேலி ருந்தே அநுபவிக்கிறது.

2/10/02

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பகவத் வைபவ ஸல்லாபம்

[பங்களூர் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள்]

ஸமீபத்தில் ஒருநாள் பாகவதோத்தமரொருவர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகையில் பெண்கள் பகுதிக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்பும்படி ஸ்ரீ அழகிய சிங்கர் நியமித்ததாகக் கூறினர். அதைக் கேட்ட எனதுள்ளம் இருவிதமாய்ப் போராடியது. "உனக்கென்ன தெரியும்? ஒரு யோக்யதையும் கிடையாது; பெரிய வித்வான்கள் மஹான்கள் எழுதும் பத்ரிகையில் மந்த மதியையுடைய நீ எழுதுவது கொஞ்சமும் உசிதமன்று; ஏதோ துணிந்து தாறுமாறாய் எழுதிக்கொண்டிருக்கிறாய்; நகைப்புக் கிடந்தான் உன் செய்கை" என்று வெறுப்புறுத்தியது ஒரு மனோபாவம். மற்றொன்றோ, "நீ பயப்படாதே; தயங்காமல் உனக்குத் தெரிந்ததை எழுது; பகவத் விஷயத்தில் ஸம்பந்தப்பட்ட மனோ வாக்காயங்கள் ஒருக்காலும் நிந்தைக்கு இடமாக மாட்டா; அல்ப ஜ்ஞானத்தினால் அநேக அபராதங்கள் நேரிட்டாலும் அவைகளைப் பெரியோர்கள் பொருட்படுத்தார்; ஸ்வல்ப நற்குண மிருந்தாலும், அதை மஹா மேருவாக க்ரஹிப்பார்கள்; அம்மஹானிட்ட கட்டளையைத் தட்டாதே" என்று தைர்யங் கூறியது. நல்லது; ஏதாவது எழுதலாமென்று யோசித்தேன்; விஷயம் ஒன்றும் தோன்றவில்லை; ஆசார்ய வள்ளல் உள்ளத்தி லெழுதினாலன்றோ ஓலையில் எழுதலாம் என்னும் தீர்க்க சிந்தனையில் ஆழ்ந்தேன். அத்தருணம் திடீரென்று பத்து வருஷங்களுக்கு முன் நடந்த ஓர் அழகிய காட்சி என் மனக்கண் முன் நின்றது. நான் அடைந்த ஆனந்தம்தா னென்ன! தாங்கவொண்ணாத் தாகத்துடன் பாலைவனத்தைக் கடக்கும் பிரயாணிக்கு யத்ருச்சையாய் எதிரில் திவ்ய தாமரைத் தடாகம் தென்பட்டால் அடையு மனுபவமே நானும் அடைந்தேன். ஆசார்ய நியமனம் அதுவேயென்று எழுதத் துணிந்தேன்.

ஒரு விவாஹத்தை உத்தேசித்து நாங்கள் பெரிய கூட்டமாய்த் திருப்பதி சென்றோம். லக்ஷ்மீ அம்மாள் என் பந்துவல்ல; மிகவும் நெருங்கிய ஸ்நேஹம். அவரும் எங்களுடன் வந்தார். அவர் அதுவரையில் திருவேங்கடமுடையானை ஸேவித்ததே கிடையாது. அவர்கள் குல தெய்வம் லக்ஷ்மீ நரஸிம்ஹ மூர்த்தி. திருமலையேற வேண்டுமானால் மற்ற யாத்ரிகள் மூட்டையைச் சுமந்து செல்லவேண்டு மென்பது அவர்கள் வழக்கம். ஆகையினால் அவர் எங்கள் சிறிய பெட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு ஏறினர். அந்தம்மா பகவத் பக்தர்; ஸாத்விக சிரோமணி; தயை சாந்தி க்ஷமை என்னும் குணங்களை ஆபரணமாக அணிந்தவர்; எம்பெருமானுடைய ப்ரிய பக்தர்களை ப்ரியமுடன் பூஜிப்பவர். அவருடன் பகவத் வைபவங்களைப் பரக்கப் பேசிக்கொண்டு திருமலையேறும்

பாக்யம் எங்களுக்குக் கிடைத்தது. "லக்ஷ்மியம்மா! பார்த்தீர்களா இத் திருமலையின் மஹிமையை? இம்மலையை ஶ்ரத்தா பக்தியுடன் ஸேவித்து ஏறுவோம்.

"ஸ்தவைஸ்தம் கிரிம் ஸ்தூய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா ।
இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா ஶர்க்கராயிதம் ॥"

ஸ்ரீநிவாஸன் க்ருபையாகிற கரும்பு ரஸம் பெருகி உறைந்து தெவிட்டாத தித்திப்பு வாய்ந்த கல்கண்டுக் கட்டி அஞ்ஜநாத்ரி. இம்மையில் இஷ்ட ஸித்தியும் மறுமையில் நித்யாநந்தமும் அருளும் ப்ரபாவமுடைய ஸித் தௌஷதம் சேஷாத்ரி. அஜ்ஞாநமாகிற காட்டுத் தீயைக் கொளுத்தி ஸர்வ மங்களகரமான ஞானப் பாலைப் புகட்டும் கருணைக் கடலாகிய அன்னை வடிவம் ஸிம்ஹாத்ரி. உள்ளும் புறமும் ஏக காலத்தில் ஒளியுறச் செய்யும் வல்லமை வாய்ந்த ரத்ந தீபம் வ்ருஷபாத்ரி. இன்னும் அது நித்ய ஸ்ரீ நித்யமங்களம் பொங்கும் திவ்ய தேசம்; முனிவர்களின் புண்ணியாச்ரமங்களும் தபோவநங்களும் பவித்ர தீர்த்தங்களும் நிறைந்த திவ்ய தேசம்; தெளிந்த நீரோடைகளும் நீர் வீழ்ச்சிகளும் அருவிகளும் பல விதமான பழ மரங்களும் புஷ்பச் செடிகளும் காண்போர் மனத்தையும் கண்களையும் கொள்ளை கொள்ளும். ஸர்வேஸ்வரன் ஸமீபத்தி லிருக்கும் பழங்களுக்குத்தான் என்ன ருசி! அப்புஷ்பங்களுக்குள்ள பரிமளந்தான் என்ன! என்ன ரமணீய ப்ரதேசம்! உள்ளும் புறமும் களங்கமற்று விளங்கும் தெளிந்த தாமரை ஓடைகளையும், அவற்றுள் பயமும் கவலையுமற்று ஸந்தோஷத்துடன் ஸஞ்சரிக்கும் மீன் கூட்டங்களையும் கண்டீர்களா? அவை திருமலைச் சுனையில் பகவதநுபவம் செய்யும் பரம பாகவதர்கள் போலும்.

"ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே."

[அழியாத யௌவந ஸம்பத்தையுடைய ரம்பை முதலிய அப்ஸரஸ் ஸ்த்ரீகள் தன்னைச் சூழ்ந்து உபசரிக்கும் ஸ்வர்க்க ஸுகாநுபவத்துடன் இப் பூமண்டல சக்ரவர்த்தி பதமும் சேர்த்துக் கொடுத்தாலும் வேண்டாம். திவ்ய தேன் பெருகி ஓடும் புஷ்ப ஸம்ருத்தியையுடைய திருமலைச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் பாக்யத்திற்கு அவைகள் அணுவளவும் ஈடாகா. அந்த பாக்யம் நான் பெறவேண்டும்.] என்றல்லவோ ப்ரார்த்தித்தார் குலசேகராழ்வார்? இத்தகைய திவ்ய தேசத்தை ஸேவிக்கும் அத்ருஷ்டம் இன்றுதான் உங்களுக்குக் கிடைத்தது. உங்கள் ஜந்மம் கடைத்தேறுங் காலம் இதுவே. இவ்வளவு ஸௌந்தர்யமும் ப்ரபாவமும் விளங்கும் திவ்ய தேசம் வேறெதுவும் இல்லை. திருமலைக்கு நிகர் திருமலையேதான்" என்றேன்.

என் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே வந்த லக்ஷ்மீயம்மாவின் முகம் அவ்வளவு ப்ரஸந்நமாக மலரவில்லை. அவர், "ஆம்; மிகவும் மநோஹரமாகிய திவ்ய தேசந்தான் அது; இருந்தாலும்............" என்று இழுத்தார்.

"ஏன்? என்ன இப்படித் தயங்குகிறீர்கள்? இதற்கு மேற்பட்ட திவ்ய தேசத்தை ஸேவித்திருந்தால் தடையின்றிக் கூறலாமே" என்று நான் சொன்னேன்.

"இல்லை; திருநாராயணபுரத்தை அலங்கரித்திருக்கும் ந்ருஸிம்ஹன் மலையின் அழகு இதைக்காட்டிலும் அதிக மில்லையா? திருக்கல் யாணிக் கரையின் ஸந்நிவேசமும், மஹா பாபங்களைப் போக்கும் திவ்ய தீர்த்தங்களும், இருபுறமும் பூத்துச் சொரியும் மரங்களும், அழகிய குகை களும், அந்த ஸௌந்தர்யத்தை நம்மால் அறிந்து சொல்லத் தரமோ! யோக நரசிங்கப்பிரானே உலகப்ரஸித்தி பெற்ற வரப்ரஸாதி; வேண்டிற் றெல்லாம் தரும் வள்ளல்; ஆஶ்ரித வத்ஸலன். அவன் தன்னடியார் களுக்கு அதிக ஶ்ரமங் கொடுக்க மனமின்றிச் சிறிய மலைமேல் அழகிய சிங்கப்பிரானைப் ஸேவை ஸாதிக்கிறான். நானும் அநேக திவ்ய தேச யாத்ரை செய்திருக்கிறேன்; புண்ய நதிகளில் தீர்த்தமாடியும், எம்பெரு மான் திவ்ய மங்கள விக்ரஹங்களை ஸேவித்தும் வந்தேன். காவேரி தீர்த்தத்திற்கு ஸமாநமாக மற்றொன்றும் தென்படவில்லை. லக்ஷ்மீந்ரு ஸிம்ஹ திவ்ய மங்கள விக்ரஹத்தில்தான் என் மனம் நிலை நின்றது" என்றார்.

இதைச் செவியுற்ற அவ்விட மிருந்த அனைவர் கண்களும் ஆஶ்சர் யத்தினால் மலர்ந்தன. உடன் வந்த என் ஸோதரி மிகவும் புத்திசாலி; தைர்யமும் அவளுக்குக் கொஞ்சம் அதிகம்; ஸமயத்திற்குத் தக்க பதி லளிப்பாள்; ஸ்ரீநிவாஸனென்றால் அவளுக்கு உயிர்நிலை. அவள் "என்ன அம்மாமீ! நீங்கள், எல்லாம் தெரிந்து இவ்விதம் கூறலாமா? திருப் பதிக்கு நிகரான திவ்ய தேசம் மற்ற எதுவும் இல்லையென்பதைப் பாமரர் களும் அறிவரே. ஹிமாசலத்தி லிருந்து கந்யா குமரி வரையிலுள்ள ஸகல ஜநங்களும் பரம பக்தியுடன் இப்பொழுது திருமலை ஏறுவதைக் கண்ணால் பார்த்தும் உங்களுக்கு இப்படித் தோன்றியது ஏன்? பக்ஷ பாதந்தான்.

"கண்ணாவா னென்னும்
மண்ணோர் விண்ணோர்க்குத்
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே."

[இவ்வுலகத்தார்க்கும் நித்ய ஸூரிகளுக்கும் இருகண்கள் போன்றவன் எம்பெருமான். அமரர்கள் மேலிருந்து இறங்கி வருகிறார்கள்; நாம் கீழிருந்து ஏறிச் செல்கிறோம். பெருமாள் பக்ஷபாத மின்றி, இரு திறத்தார்களின் ஆராதநங்களையும் ஸமமாக ஏற்றுக்கொள்ளும்

பொருட்டே குளிர்ச்சியும் அழகும் அமைந்த திருவேங்கட மலையில் நித்ய வாஸம் செய்கிறான்] என்றல்லவோ ஆழ்வார் அநுபவம்? அமரர்களும் திருமலையின் ஆநந்தத்தை அநுபவிக்க விரும்பி வருகிறார்க ளென்றால் அதன் பெருமையை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? மாண்டு பிறக்குந் துயர்போய் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும் வேங் கடமன்றோ இது? கருணைக்கடல் ஸ்ரீநிவாஸன். இக்கலியில் அவன் ப்ரத்யக்ஷ தைவம். இத்திருமாலுக்குப் பிறகுதான் உங்கள் நரஸிம்ஹ மூர்த்தி என்று படபடப்பாய்க் கூறினாள்.

லக்ஷ்மீ அம்மாவின் வேகந்தான் என்ன! நல்ல காலம் எங்கள் பெட்டியைக் கீழே போடவில்லை. அதில் ஸ்ரீநிவாஸன் முடிப்புப் பணங் கள் தானிருந்தன. அவன் ஸொத்தை அவனே காப்பாற்றினான். நான்கு படிமேல் ஏறியிருந்தவர் வேகமாய்ப் பின் திரும்பி வந்தார். அவ ருள்ளத்தில் உறங்கிக்கிடந்த ஆசார்ய பக்தி தெய்வபக்தி முதலியவைகள் விழிப்புற்றனபோல் சரமாரியாய் உபந்யாஸம் செய்யத் தொடங்கினார்.

"அம்மா மைதிலி! நீ சிறியவளானாலும், நல்ல ஞானம் ஸம்பாதித் திருக்கிறாய். உன் தைவபக்தியை மிகவும் மெச்சினேன். எனக்கு என்னமோ ஒன்றுந் தெரியாது. நான் ஞான சூந்யை; பக்திஹீனை; வைராக்ய லேசமும் இல்லாதவள்; உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் எம்பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பித்ததாக வாயினால் சொல்வதைத் தவிர செயலில் காட்டாதவள். நான் சாஸ்த்ரம் படித்தவ ளில்லை. ஆனால் ஆசார்யனிடமும் குல தைவத்தினிடமும் த்ருட பக்தி, உண்மை, நம்பிக்கை, இவைகள் என்னிடம் வேரூன்றி நிற்கின்றன. இது நிச்சயம். மற்ற திவ்ய தேசங்களும் அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் திவ்ய மங்கள விக்ரகங்களும் ஆகிய எல்லாம் மேன்மை பொருந்தியவைகள் தாம். அந்த எண்ணமும் பக்தியு மில்லாவிடில் இப்பொழுது ஸ்ரீநி வாஸனை ஸேவிக்க வருவேனா? ஒரு விஷயம் கேள். இவ்வுலக ரீதியிலேயே பாரத தேசத்துப் பெண்கள் பெற்றோர்களால் கல்யாணம் செய்து வைக்கப்பட்ட க்ணவன் அழகோ அழகில்லையோ, குணவானோ இல்லை யோ, அவனைத் தவிர சக்ரவர்த்தியானாலும் மற்றொருவர் மேல் காதல் கொள்ள மாட்டார்க ளல்லவா? மற்ற பெரியோர்களிடம் தேவதா பக்தி யும், ஸத்குண சீலர்களிடம் ஸஹோதர வாத்ஸல்யமும் வைப்பார்கள். மேலும் தனக்குப் பகவானால் அளிக்கப்பட்ட குழந்தை அழகில்லாமல் மெலிந்திருந்தாலும் அதை அன்புடன் பேணி வளர்ப்பதுபோல், அடுத் தாத்துக் குழந்தை க்ருஷ்ண விக்ரஹம் மாதிரி அழகாயிருந்தாலும் அதை வளர்ப்பார்களா? சற்று நேரம் எடுத்துக் கொஞ்சி முத்தமிட்டுப் போவார்கள். அவ்விதமேதான் குலதைவங்களிடமும். தங்கள் ஆசார்யனிடமும் தனி பக்தி ப்ரகாசிக்கும்; தங்களுடைய இஷ்ட தைவங்களை மேன்மையாகவே மதிப்பார்கள். அது இருக்கட்டும் நீங்கள் எவ்விதம் கூறினாலும் நிச்சயமாய் எங்கள் நரஸிம்ஹாவதாரத்தில் ப்ர

காசிக்கும் கருணை வேகம் மற்ற அவதாரங்களில் கிடையாது. ஆதிமூல மென்றழைத்த கஜராஜனை ரக்ஷித்ததும், பஞ்சவரைப் பலவகையும் காத்ததும், கோபகோபீ ஜனங்களைக் காட்டுத் தீயிலிருந்து காப்பாற்றியதும் தராசில் ஒருநிறை. குழந்தை ப்ரஹ்லாதனைக் காப்பாற்றியது ஒருநிறை. மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாத வாத்ஸல்ய குணம் லக்ஷ்மீ நரஸிம்ஹனிடமே பிரகாசித்தது.

“பக்தஸ்ய தாநவஶிஶோ: பரிபாலநாய
பத்ராம் ந்ருஸிம்ஹகுஹநாமதிஜக்முஷஸ்தே |
ஸ்தம்பைகவர்ஜமதுநாபி கரீஶ நூநம்
த்ரைலோக்யமேததகிலம் நரஸிம்ஹகர்பம் ||”

[பக்தனாகிய அஸுரக் குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டு எம்பெருமான் எடுத்த அவதாரம் அத்யாஸ்சர்யம். ப்ரஹ்லாதனது பக்திக்குக் கட்டுப்பட்டு உத்பத்தி விநாசமில்லாத பகவான் அசேதநமாகிய தூணைத் தாயா யடைந்தார். மனிதனு மில்லாமல் மிருகமு மில்லாமல் நரஸிம்ஹ ரூபியாய் அவதரித்ததே அவ்வஸுர ஸம்ஹாரத்திற்குப் போதுமாயிருந்தது. தூணிலிருந்து அவதரிக்கவேண்டு மென்று ஹிரண்யகசிபு ப்ரம்ஹதேவனிடம் வரம் வாங்கவில்லை. அவ்விதமிருந்தும் பக்தன் எந்தெந்த இடத்தைச் சுட்டிக் காட்டுவானோ அவ்வவ்விடமிருந்தெல்லாம் அவதரிக்க வேணுமென்று ஸகல சராசரங்களிலும் மங்களகரமான நரஸிம்ஹ மூர்த்தியாக வஸித்தான் பகவான். ப்ரஹ்லாதாழ்வான் ஒரு தூணைக் காண்பித்தார். அதிலிருந்து அவதரித்தார் அத்யாஸ்சர்ய கவசம் பூண்ட சிங்கப்பிரான். அந்த ஒரு கம்பத்தைத் தவிர இம்மூவுலகம் முழுதும் இப்பொழுதும் நரஸிம்ஹ கர்ப்பமாவே இருக்கிறது. இது நிச்சயம்] என்று அருளிச்செய்தார் ஸ்ரீ தேசிகமணி. மற்ற எந்த அவதாரங்களிலும் அஸுரன் வீட்டுத் தூணை ப்ரம்மாக்களுக்குப் பாட்டியாகச் செய்யவில்லை; ஆஸ்ரித ரக்ஷணத்திற்குரிய சங்கு சக்ரம் முதலிய புராதநமான ஆயுதங்களை விட்டு அவதரிக்கவில்லை. விசித்ர ரூபம்; ஆஸ்சர்ய சக்தி; அபரிமித வாத்ஸல்யம்; கரை புரண்டோடும் கருணை வெள்ளம்; இவைகளை இவ்வவதாரத்தில்தான் கண்டோம். உதார சீலர்களாகிய ஆழ்வார்களும் “அன்றீன்ற கன்றுக் கிரங்கிச் சுரக்கும் தேனுவைப்போல” அனைத்துலகும் உய்யும் வண்ணம் நான்கு வேதங்களையும் அமுதொழுகுகின்ற எளிய தமிழ் மொழியில் திவ்ய திருவாய்மொழியாய்ப் பாடியிருக்கிறார்கள். அம்மொழி தங்கக் குடம் போன்றது. சாஸ்த்ரங்களை ஒத அதிகாரமற்ற ஸ்த்ரீ சூத்ரர்களும் அதில் தீர்த்தமருந்தலாம். கங்கையைப்போல் தான் அசுத்தமாகாமல் பருகுபவர்களின் ஆத்மா சரீரம் இரண்டிற்கும் ஸகல ஸம்பத்துக்களையும் அளித்துப் பரிசுத்தமாக்கவல்லது. அப்படிப்பட்ட தமிழ் வேதத்தில் எங்கள் நரசிங்கப்பிரானைப் பாடாத ஆழ்வார்களே கிடையாது. அதில் பெரியாழ்வார் அநுபவத்தைச் சிறிது பராமர்சிப்போம்.

"அளந்திட்ட தூணை அவன் தட்ட வாங்கே
வளர்ந்திட்டு வாளுகிற் சிங்க உருவாய்
உளந்தொட் டிரணியன் ஒண்மார் பகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி பேய்முலை யுண்டானே சப்பாணி.'

அசுரனுக்கு உள்ளூற பயம். அவன் தன் சத்ரு மாய னென்பதை அறிவான். ஆகைனலேயே நல்ல தூணைப் பார்த்து ஊசி நுழையும் இடமுமின்றி அகலம் நீளம் அளந்து நட்டான். 'எங்குமுளன் கண்ணன்' என்றான் பள்ளியிலோதி வந்த தன் சிறுவன். அச்செல்வக் குழந்தைமேல் சீறி, வேறு யாராவது தட்டினல் மந்திர மாயங்களால் தங்கள் கையில் நரஸிம்மனை வைத்து கம்பத்துள் நுழைத்து விடுவார்கள் என்று பயம் போலும்! அவன் தட்டின இடத்திலேயே மலைபோல் சிங்க உருவாய் வளர்ந்து, கத்திபோன்ற தன் நகங்களை ஆயுதங்களாய்க்கொண்டு தோன்றினன். எம்பெருமானின் கருணை அப்பொழுதும் அவ்வஸுரனை ஸம்ஹரிக்க விடவில்லை. தன் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்ததினல் நற்குண முண்டாய் ஒரு ஸமயம் அநுகூலனைய் ஶரணாகதி செய்வனே என்று ஹ்ருதயத்தைப் பரீக்ஷை செய்து பார்த்தான். ஒன்றும் பயனில்லை யென்றறிந்த பிறகு ஸம்ஹரித்தான். இப்படிப்பட்ட வாத்ஸல்யமும் கருணையும் பொங்கிப் பெருகும் அவதாரம் வேறு எது சொல்" என்று மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனர்.

இவ்வழகிய பகவத் வைபவ ஸல்லாபங்களைக் கேட்ட எனக்கு அத்யாநந்தம் பொங்கியது. திருமலை ஏறுவதற்குள் நானும் சில வார்த்தைகள் பேச ஆவல் கொண்டேன். "என்ன லக்ஷ்மியம்மா! நீங்கள் கூறிய ஆழ்வாராசார்யகள் ஸாக்ஷி ஒன்றும் பயன்படாது போலிருக்கிறதே. அவர்கள் பக்ஷபாதமின்றி எல்லா எம்பெருமான்களையும் மங்களாசாஸநம் செய்திருக்கிறார்கள். பக்தி வெள்ளம் கரைபுரண்டோடும் அவர்கள் பகவதநுபவம் ஒரு அவதாரத்திலிருந்து மற்றொரு அவதாரத்திற்குத் தாவும். ஒரே பாசுரத்தில் முதலடியில் "எந்தாய் தண் திருவேங்கடத்துள் நின்றாய்" என்று பகவத் ஸௌலப்யத்திலும் அர்ச்சாவதாரத்திலும் ஈடுபட்டுப் பாடினர். இரண்டா மடியில் "இலங்கை செற்றாய் மராமரம் பைந்தாளே ழுருவ ஒருவாளி கோத்த வில்லா" என்று விபவாவதாரமாகிய சக்ரவர்த்தித் திருமகன் திவ்ய சக்தியைக் கண்டு மோஹித்தார். ஆகையால் எம்பெருமானது அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹங்க ளெல்லாம் மேன்மை பொருந்தியவைகளே. துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலநத்தின் பொருட்டுப் பரம புருஷன் எடுக்கும் ஸர்வாவதாரங்களும் அளவற்ற மஹிமை வாய்ந்தவைகள் தான்.

தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதமும் தித்திப்புள்ளவைகளாகிலும், ஒவ்வொன்றின் சுவைக்கும் வ்யத்யாஸம் இருக்கிறதல்லவா? ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று அதிகமாக ருசிக்கும். அவ்விதமேதான் எம்பெருமான் திவ்ய மங்கள விக்ரஹங்களிலும். ஒவ்வொன்

றில் சிலருக்கு மோஹம் அதிகம். நமது ஆசார்ய சக்ரவர்த்தியே ஸ்ரீ கோபால விம்சதியில் :

“அதராஹித சாருவம்ஶநாளா:
மகுடாலம்பி மயூரபிஞ்சமாலா: |
ஹரிநீலஶிலாவிபங்கநீலா:
ப்ரதிபாஸ்ஸந்து மமாந்திமப்ரயாணே ||”

[என்னப்பனே கண்ணா! கோவைக் கனி போன்ற உன் திருவதரத்தில் வைத்தூதும் அழகிய புல்லாங்குழலுடனும், திவ்ய திருமுடியில் தொங்கும் மயில் தோகை மாலையுடனும், இந்த்ர நீலமணி வண்ணனாய் ஆயிரக் கணக்கான க்ருஷ்ணனாய் என் அந்திம காலத்தில் ஸேவை ஸாதித்தருள வேண்டும்] என்று ப்ரார்த்தித்தார். அவர் ஸ்துதிக்காத பெருமாள்களில்லை. அனைவரிடமும் பரம பக்தி விளங்கி வருவதைக் காண்கிறோம். ஆனால் அவரது இஷ்ட தைவம் கண்ணனென்பது நன்றாகத் தெரிய வருகிறது. அவர் ஸ்ரீநிவாஸன் க்ருபா ப்ரவாஹத்தைக் குறித்துத் தயா சதகமென்னும் க்ரந்தத்தில் விஸ்தாரமாய் ஸ்துதித்திருக்கிறார். அதில் உங்கள் இஷ்ட தைவமான நரஸிம்ஹாவதாரமும் ஸ்ரீநிவாஸன் தயா கார்யந்தான் என்கிறார்.

“ஸடாபடலபீஷணே ஸரபஸாட்டஹாஸோத்படே
ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத்ப்ருகுடிகேऽபி வக்த்ரே க்ருதே |
தயே வ்ருஷகிரீஶிதுர்தநுஜடிம்பதத்தஸ்தநா
ஸரோஜஸத்ருஶா த்ருஶா ஸமுதிதாக்ருதிர்த்ருஶ்யஸே ||”

[பயங்கரமாகிய பிடரி மயிர்; உலகமே நடுங்கும் ஸம்ப்ரமம்; அத்புத அட்டஹாஸம்; இடி முழக்கம் போன்ற கர்ச்சனை; கோபத்தினால் ஜ்வலிக்கும் புருவ நெறிப்புடைய திருமுகம்; ஆனால் அதே திருமுகமண்டலத்தில் விளங்கும் செந்தாமரைக் கண்களால், அஸுரக் குழந்தையான ப்ரஹ்லாதனைக் கடாக்ஷிப்பது அன்னைப் பாலூட்டுவது போலிருந்தது] என்றருளிச் செய்தார். அதேபோல் இப்பொழுது நீங்கள் கருணையும் வாத்ஸல்யமும் மழையாய்ப் பொழியும் திருவேங்கடமுடையான் கமலக் கண்களை ஸேவித்துப் பரமாநந்தமடையப் போகிறீர்கள். மேலும் இப்பொழுது நாம் புருஷோத்தமன் ப்ரபாவங்களைப் பேசி வாதித்ததும் அதிசயமன்று.

“அணங்கென வாடுமே னங்கம்
வணங்கி வழிபடு மீசன்
பிணங்கி யமரர் பிதற்றும்
குணங்கெழு கொள்கையி னானே.”

[எம்பெருமானை என் மனத்தை விட்டு அரைக்கணமும் அகல விடேன். தைவாவேசம் பிடித்தவர்கள்போல் தாறுமாறாயாடுவேன்.

அவ்விதம் க்ரமம் தவறி ஆடலாமா வென்ருல், நதிகள் ஸாகரத்தை நாடிச் செல்லுமாப்போல் ஸகல கல்யாண குணங்களும் எம்பெருமானிடமே அடைக்கலம் புகுந்திருக்கின்றன. பரம பதத்தில் நித்ய ஸூரிகள் புருஷோத்தமனின் அக்குணங்களில் தாங்கள் அநுபவித்த கல்யாண குணங்களையே மேன்மையாக மதித்து ஒருவர்க்கொருவர் 'வாத்ஸல்யமே உயர்ந்தது; இல்லை; காருண்யம் அதைவிட மேலானது; இல்லவே இல்லை; அதெப்படிக்கூடும்? ஸர்வ சக்தனுடைய ஸ்தைர்ய தைர்ய ஸௌர்ய பராக்ரமங்களே உத்தம குணங்கள்; ஒருக்காலு மில்லை; ஸர்வேஸ்வரனுக்குப் பரத்வ குணமிருப்பது என்ன ஆச்சரியம்! ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்களில்லாவிடில் மற்ற குணங்கள் சோபிக்கமாட்டா' என்று ஸந்தோஷம் உள்ளடங்காமல் வாதித்துக் கோஷிக்கிருர்கள். அப்படியே எனக்கும் பகவத் கல்யாண குணங்களை அநுபவிக்கையில் க்ரமம் அக்ரமம் என்று தெரியாமல் தேஹம் பரவசமடைகிறது] என்றருளிச் செய்தார் நம்மாழ்வார். அதேபோல் இப்போது இத்திருமலையில் நித்யஸூரிகள் எழுந்தருளிப் பகவானை ஸேவிக்கிருர்க ளென்பதை விளக்கிக் காட்டுகிறது நம் ஸல்லாபமும். அவர்கள் ஸஹவாஸத்தினுல் நமக்கும் அக்குணம் ஏற்பட்டது என்றே நினைக்கிறேன்.

இதற்குள் கதிரவன் மலைவாயில் விழுந்தான். திடீரென்று மேகமும் கவிழ்ந்து கொண்டது. மழைக்குப் பயந்து வேகமாய் நடந்தோம். ஓடோடியும் சென்று கோயிலுள் நுழைந்தோம். அன்று வியாழக் கிழமை. பதிதபாவநன்—பக்தவத்ஸலன் — புருஷோத்தமன் — ஸ்ரீநிவாஸன் திவ்ய பூவாலங்கி ஸேவையுடன் குளிர்ந்த கமலக் கண்களால் எங்களை வெகு தூரத்திலிருந்தே நல்வரவேற்ருன். அத்யத்புத ஸேவை. 'நான்கு திருக்கைகளாலும் நான்குவித புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அருளவே இத்திருமலையில் நித்யவாஸம் செய்கிறேன்' என்று கூறுவது போலிருந்தது மந்தஹாஸ மதிமுகம். கண்குளிர ஸேவித்துத் தந்யர்களானேம். க்ருதார்த்தர்களானேம்.

லக்ஷ்மியம்மா பக்தி வெள்ளம் உள்ளடங்காமல் பெருகிய கண்ணீரும் சிலிர்த்த மயிரும் தழதழத்த குரலுமாய்ப் பகவானை ஸேவித்தார். அவருக்கு ஸ்ரீநிவாஸன் லக்ஷ்மீ நரஸிம்ஹனுகவே ஸேவை ஸாதித்தார் போலும். அவர்,

"𑌯𑌸𑍍𑌯𑌾𑌭𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌜𑌨𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌨𑍍𑌤𑍁𑌃
𑌪𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 |
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇𑌽𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌯𑌲𑌭𑍍𑌯𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ||"

என்னும் ஶ்லோகத்தையே அநுஸந்தித்தது காதில் விழுந்தது. ஸர்வேஸ்வரனுடைய ஆஶ்சர்ய லீலைகள் தாம் என்னே!

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வாக்கின் வைபவம்

[ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ கைங்கர்யம்
ஸ்ரீ. உப. அம். நரஸிம்ஹாசார்யர்]

இவ்வழகிய லீலாவிபூதியிலேயே நாம் விரும்பும் பலம் கிட்டுமாகில், "கடுஷெவெஷ ஃயாவிநெத கியெூ வவதெ வஜெஷ" என்றபடி வேறு ப்ரதேசத்தைத் தேடவேண்டிய ஆவஶ்யகதை இராது. ஆனது பற்றியே "இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென்" என்றும், "ஷ்தும் ஶவெ வாரணமெஶைநாய வெகுண்டவாஸெவி நமெஃலியாஷ:|" என்றும் இவ்விபூதியைப் புகழ்ந்தார்கள் முன்னோர்கள். இது நஹூாந தொவி........" என்கிற ரீதியில், மஹாங்களின் மாஹாத்ம்யத்தால் இவ்விருள் தருமா ஞாலமும் அம்மஹான்கள் விஷயத்தில் நிர்வீர்யமாய் ஒழிகிறது.

அவ்வளவு மாஹாத்ம்யம் இல்லாதார்க்கு, விண்ணுளார் பெருமாற் கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன்களின் விஷயங்களை விளைப்பிக்கும் இஞ்ஞாலம் மேலெழும்ப வொட்டாமல் அழுத்துகின்றது. ஆனது பற்றி இதில் உழல்பவர்கள், "ஷஹஸ்ரிமி ஒஃ வுதீதாநி ஜநாநி தவ வு" என்கிற ரீதியால் அநேக ஜந்மங்களை எடுத்துத் தடுமாறும்போது உத்தாரகமான உபாயங்களில் ப்ரவ்ருத்திக்க முயல்கின்றனர். ஆகிலும் "ஐவூஹம் ஃநுஷம் ஜநு" என்கிறபடி மஹா புண்ய வ்யயமான மானிட ஜந்மம் எடுத்து விவேகம் பிறந்தாலொழிய அவ்வுபாய முயற்சி பயன்படாது. "ஃஹதா வுண்ணுவவெண்ணு ந ஶ்ரீதெயம் காய நள:" என்கிறபடி ஸுக்ருத விஶேஷத்தால் சரீரமெடுத்து அதிலிருக்கும் பதினொரு இந்த்ரியங்களையும் ஸபலமாக்கவேண்டுமென்றும், அதுமூலமாய் நற்கதிபெற்று உஜ்ஜீவிக்கவேண்டுமென்றும் கருதித் தன்னையே வ்யாஜமாகவைத்து உலகத்துள்ளார்க்கு ஸத் விஷயத்தைப் புகட்ட விரும்பி, முதன்முதலில் ஸ்ரீகுலசேகரப்பெருமாள் தமது நாவை நோக்கி "ஜிஹ்வெ கீதூய கெஶவமு" [ஹே நாவே! பகவானைக் கீர்த்தநம் செய்] என்று அருளிச்செய்தார். நாப் படைத்தார்க்குப் பயனாய், இப்படிக்கு ஸ்துதித்தபோது, "மாரியனையகை மால்வரை யொக்கும் திண்டோளென்று பாரிலோர் பற்றைப் பச்சைப் பசும் பொய்களைப் பேசவே" என்கிறபடி ஏதோ சில்வான ப்ரயோஜநத்திற்காக "வாநரீவ வாநெவீம் நதயுணி ஶுஹெ ஶுஹெ" என்கிறபடி குரங்கு பிடித்து ஜீவிப்பவன் வீடுகள் தோறும் குரங்கை யாட்டி வைக்

கிருப்போல் தனது அருமையான வாக்தேவியை ஆட்டி வைத்து "வாரமாணவாரோணமிநு வவூதீக்ஷ்ரது" என்கிறபடி அவர் தோளை யும் ஹஸ்தத்தையும் ஸ்தோத்ரம் செய்து நஸ்வர பலனைப்பெற்றுப் பசும் பொய்களைப் பேசுவதின் பலனைப் "ஊயொயஃ வாவாதா" என்றபடி தள்ளி விடுகிறது.

ஆனது பற்றியே "நாயெ நஷூரணரநூஃநூஃவி வா தனாஹி நாஷேகிநீநாஷேகஷூரஹணீயஸளாஹரூவா வாவா ந யாவாரஹெ" என்று நம் ஸ்ரீ தேசிகனும், "காயாய நீவ‌ம் கூநீயவாவா ஶோவாஷய ஷூயாரூவா நயாவெ" என்று ஒரு மஹானும் தமது வாக்குக்கு இருக்கும் பெருமை பகவானின் நாபீகமலத்தின் நறுமணத்துக் கொப் பான மணமுடைய தென்றும் ரஸமுடைய தென்றும் பேசி, அதனால் 'அற்பர்களைத் துதிக்கமாட்டோம்' என்று அருளிச் செய்தார்கள்.

"கீதயூ" என்பது "ஸததம் கீதயனொ ரோ யதஷூ ஷூஹவுஜாஃ" என்று கீதாசார்யனும் கீர்த்தநம் செய்யவேண்டும் என்றும் திருவுள்ளம் பற்றியதை அடியொற்றிருக்கிறது. இங்கு 'ஸததம்' என்பதைச் சிலர் 'ததம் வீணாதிகம் வாஷூ' என்றபடி வீணை முதலிய வாத்யங்களோடு கீர்த்தநம் செய்ய வேண்டுமென்றும், அப்போதுதான் 'கீதயஜஃ' என்பதும் பொருந்தும் என்கிறார்கள். இந்தக் கீர்த்தநமே "ஸங்கீதூ நாராயண ஶஷூரதூ" என்கிற தாலும் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ :

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபாநு௵ சித்திரைமீ

1உ	திங்கள்	—	வருஷப் பிறப்பு. மேஷ ரவி 22-42. சூந்ய திதி.
3உ	புதன்	—	அமாவாஸ்யை.
6உ	சனிக்கிழமை	—	அக்ஷய த்ருதீயை.
9உ	செவ்வாய்	—	பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்.
15உ	திங்கள்	—	ஏகாதசி.
17உ	புதன்	—	நரஸிம்ஹ ஜயந்தி.
24உ	புதன்	—	ஷஷ்டி ஸப்தமி திதி த்வயம்.
25உ	வியாழன்	—	அஷ்டமி திதி.
28உ	ஞாயிறு	—	ஏகாதசி திதி,
29உ	திங்கள்	—	ஏகாதசி வ்ரதம்.
30உ	செவ்வாய்	—	மேஷ க்ருஷ்ண த்ரயோதஶி திதி.
31உ	புதன்	—	„ சதுர்த்தசி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

உருவெளித் தோற்றம்

[தமிழ் பண்டித ஸ்ரீ. உப. கோ. ஸுதர்சநம் ஐயங்கார்]

மனத்தில் இடைவிடாது நினைக்கப்பட்டபொருள் ஸாவநா ப்ரகர்ஷத்தால் கண்ணுக்கு எதிரில் காணப்பட்டாற்போலத் தோன்றுதல் உருவெளித் தோற்றமாகும். சூர்ப்பணகையால் வருணித்துச் சொல்லப்பட்ட சீதையின் வடிவத்தை இடைவிடாது சிந்தித்திருந்த இராவணன் அவ்வடிவத்தைக் காட்சி ப்ரமாணத்தாற் கண்டு, "அத்விதீயமான ஒரு பவளவல்லி, தன்மீது காளமேகத்தைத் தாங்கி, இரண்டு இளந்தெங்கைக் கொண்டு, ஒரு சந்திரனையும் தரித்துக்கொண்டு, ரத்ந தீபம்போல் காட்சி அளிக்கிறதே! இது ஓர் உண்மைத் தோற்றமோ? அன்றேல் எனக்குள தாகிய காம மோஹத்தால் எழுந்த மயக்கந்தானோ? இதுவரை ஈரேழுலகிலும் இதுபோன்ற பெண்ணுருவத்தைப் பார்த்தேனில்லையே! இது என் தங்கை சூர்ப்பணகையால் சொல்லப்பட்ட பெண்ணுருவாகத்தான் இருத்தல் வேண்டும். ஹா! ஸீதே! என் காமநோயைத் தீர்த்தற்கு என்னைத் தேடிக்கொண்டுவந்த அருமருந்தோ நீ!" என்றிவ்வா றெல்லாம் வீண் மநோராஜ்யம் பண்ணித் தபிக்கிறான்.

பிறகு: 'சூர்ப்பணகை இவ்வுருவத்தைக் கட்புலனாக நேரிற் கண்டவளல்லவா? அவளை வருவித்து நமது ஐயத்தைத் தீர்த்துக்கொள்வோம்' என நினைத்து அவளை வருவிக்கிறான். சூர்ப்பணகை வருதலும் அவளை நோக்கி, "நங்காய்! வாள்போலும் மையுண்ட கண்களையுடைய மயில் போன்ற சாயலுள்ள ஒருத்தி என் எதிரில் நிற்கிறாள்; இவள் தானா நீ சொன்ன சீதை"? என்றான்.

சூர்ப்பணகை இராமனையே இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருப்பவளாதலால், இராவணன் வினவியதற்கு விடையாகச் சூர்ப்பணகை வாயிலாகக் கம்பர் கவித்திறம் எவ்வாறு விளங்குகின்றதென்பது நேயர்கள் கவனிக்கவேண்டும்.

"செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினோடும்
சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைகளோடும்
அந்தா ரகலத்தொடு மஞ்சனக் குன்றமென்ன
வந்தா னிவனாகு மவ்வல்விலி ராமனென்றாள்."

அவிச்சின்னமான ஸ்ம்ருதி ஸந்தானத்தினால் இராமபிரானது வடிவத்தைச் சூர்ப்பணகை தன் உருவெளித் தோற்றத்திற் கண்டு, "செந்தாமரை மலர்போன்ற கண்களுடனும், தொண்டைக்கனி நாணும் செவ்வாயுடனும், அழகொழுகும் தோள்களுடனும், முழந்தாளளவும் தொங்குகிற பெரிய கைகளுடனும், ஓர் அஞ்ஜனகிரிபோல் காட்சி அளிக்கும் இவன் வல்வில் ஏந்திய இராமனே யாவன்" என்றாள்.

இராமனிடம்தான் கொண்டுள்ள காதல் தன்னையு மறியாமல் தலை மண்டைகொண்டு விஞ்சுதலால், தமையன் முன்னிலையில் 'சொல்வன இவை, மறைப்பன இவை' என்னும் பாகுபாடும் அறியாதவளாய் அப்பெருமான் அழகைத் தான் ஈடுபட்டபடி வருணித்துக் கூறுகின்றாள் என்பது நோக்கத்தக்கது. பக்தியே ஶ்ருங்காரமாகப் பரிணமிக்கும் என்று ஆன்றோர் கூறிய விதி இவட்கு இயல்பில் வாய்ந்திருப்பினும், அந்தோ! இம்மனோபாவத்துடன் அப்பிரானின் கால் பிடிப்பதற்குப் பதில் கைபிடிக்கக் கருதிய குற்றமே இவளை உய்ய வொட்டாமற் செய்ததுபோலும்.

தங்கையை மூக்கும் தமையனைத் தலையுந் தடிந்தவென் தாசரதிபோய்
எங்குந் தன்புகழாக விருந்தரசாண்ட வெம்புருடோத்தம னிருக்கை
கங்கை கங்கையென்ற வாசகத்தாலே கடுவினைகள் களைந்திடகிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற கண்டமென்னும் கடிநகரே.

ஸ்ரீ அழகியசிங்கருடைய யாத்ரை

ஸ்ரீ அழகிய சிங்கர், தில்லை ஸ்தானம், தஞ்சாவூர், நெடுத்தெரு, புள்ளபூதங்குடி முதலான இடங்களுக்கு எழுந்தருளிவிட்டு, இப்பொழுது திருக்குடந்தையில் எழுந்தருளி இருக்கிறார். இவ்விடத்தில் ப்ராயேண சில தினங்கள் எழுந்தருளி இருக்கலாமென்று தெரிகின்றது. எல்லா இடங்களிலும் ஆஸ்திக சிஷ்யர்களெல்லாரும் மிக்க உத்ஸாஹத்துடன் கைங்கர்யங்களைச் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை

பூலோக வைகுண்டமென்கிற ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் சென்ற 19—3—'42-ல் ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதி கைங்கர்யபரர்களால் அநந்த பரிஜனங்களுடைய உதவியின்பேரில் ஸ்ரீ ரங்கநாதனுக்கு காலை சுமார் 9-மணிக்குமேல் சாஸ்த்ரோக்தமாய் ஸங்கல்பித்துக்கொண்டு லோக க்ஷேமத்தை உத்தேசித்து லக்ஷார்ச்சனை மிகவும் விமர்சையாக நடத்தப்பட்டு ஏராளமான சக்கரைப் பொங்கல் தளிகை ஸமர்ப்பித்து ஸர்வ ஜநங்களுக்கும் டிரஸ்டிகளின் நேர் பார்வையில் விநியோகம் நடைபெற்றது. அர்ச்சனையின் விமர்சையும் அலங்கரித்திருந்த புஷ்பத்தாலும் வியக்கத் தக்கது. பார்த்தவர்கள் இதுதான் வைகுண்டமோ அவ்விடத்தில் கைங்கர்யம் இப்படித்தான் நடைபெறுகிறதோ என்று நினைக்கும்படி இருந்தது. கூடிய சீக்கிரத்தில் இதேமாதிரி லக்ஷார்ச்சனை ஸ்ரீரங்கநாயகித் தாயார் ஸந்நிதியிலும் நடைபெறும்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

செய்திகள்

---

(1)

[நெடுந்தெரு வித்வான் ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் சென்ற மாசி௴ 19௳ தமது க்ருஹத்திற்கு ஸ்ரீ கண்ணனை எழுந்தருளப் பண்ணி டோலோத்ஸவத்தைக் கண்டருளச் செய்தபொழுது, அவரால் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவோலக்கத்தில் வாசித்துக் கொடுக்கப்பட்ட ஶ்லோகங்கள்.]

[illegible] |
[illegible] ‖ 1.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 2.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 3.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖

---

(2)

ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரோத்ஸவம்

இக்காலத்தில் அப்பக்குடத்தான் என்று வழங்கப்படுமதாய் குருமாமணியுந்து புனல் பொன்னித் தென்பால் திருமால் சென்று சேர்விடம் தென் திருப்பேரே' என்றும் 'கிளி தாவிய சோலைகள் சூழ் திருப்பேரான்' என்றும், நம்மாழ்வாராலும் 'செய்யலர் கமலமோங்கும் செறிபொழில் தென் திருப்பேர்' என்றும், 'தேனமர் பொழில்கள் சூழ்ந்த செறிவயற்றென் திருப்பேர்' என்றும், திருமங்கையாழ்வாலும் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட திருப்பேர் திவ்ய தேசத்தில் அரவணையில் துயிலமர்ந்த வெம்பெருமானை ஸ்ரீ அழகியசிங்கர் திருவடி தொழுது க்ருதார்த்தராய் எழுந்தருளி இருக்கையில், 'குலையெடுத்த கதளிப் பொழிலூடும் வந்துந்திமுன் அலையெடுக்கும் புனல் காவிரி' என்றும், 'வண்டு பாடும் மதுவார்புனல் வந்திழி காவிரி'

என்றும் சொல்லுகிறபடியே காவிரியாற்றின் நீர்வளம் நிறைந்த சோளதேசத்திலிருக்கும் கோனேரிராஜபுரமென்கிற புராதநாக்ரஹாரவாஸிகளான ஸ்ரீ உ. வே. வீரராகவய்யங்கார், ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீ உ. வே. ராகவாசாரியர் முதலான அநேகம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்து 'சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானுடனே ஸ்ரீ அழகியசிங்கர் அடியோங்கள் வஸிக்கும் ஷை அக்ரகாரத்திற்கு எழுந்தருளி இருந்து அடியோங்களை க்ருதார்த்தராக்கியருள வேணும்' என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் அவருடைய ப்ரார்த்தனைக்கிணங்கி தென் திருப்பேர் விட்டு புறப்பட்டு, காய்த்த நீள் கமுகுங்கதளியும் தெங்குமெங்குமாம் பொழில்களும் சூழ்ந்த காவிரியின் கரையோடு புது ஸத்ரமென்கிற மண்டபத்திற் கெழுந்தருளி அங்கு நீராடி நித்ய கர்மாநுஷ்டாநங்களைச் செய்தருளி அங்கிருந்த சில பக்த சிகாமணிகள் சக்திக்கநுகுணமாக ஸமர்ப்பித்த பதார்த்தங்களைக் கொண்டு அபிகமநாதி திருவாராதநங்களையெல்லாம் முடித்துக்கொண்டு அன்றையதினம் ஆங்கெழுந்தருளி இருந்து அக்காவிரியின் கரையோடு கோனேரிராஜபுரத்தின் ஸமீபத்தில் எழுந்தருள, அப்பொழுது அவ்வக்ரகாரவாஸிகளாய் தூருதமனக் காதல் தொண்டர்களான வெல்லா வைஷ்ணவர்களும் மங்கள வாத்யங்களோடும் வேத கோஷங்களோடும் பூர்ண கும்பங்களோடும் அந்தச் சிங்கப்பிரானையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்து எதிர்க்கொண்டு

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

என்பதுபோல் அலங்கரிக்கப்பட்ட திருவீதிகளில் நிதியும் நற்கசுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்திவந்து உபசரிக்க முன் சொன்னபடி திவ்யாலங்காரங்களினல் அலங்கரிக்கப்பட்ட ஸஹஸ்ரரஷ்மிணாயணவஸ் போல் விளங்காநின்ற வோர் திருமாளிகையில் அச்சிங்கப்பிரானை வெள்ளி மயமான மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணிவைத்து முன்பு பரதாழ்வான் பரிஜநங்களுக்கு பரத்வாஜ மஹர்ஷி உபசரித்ததுபோல இரண்டு திநங்களிலும் அந்ததந்தக் காலோசித உபசாரங்களில் குறைவில்லாதாராதித்து மறுநாளிரவில் ஸ்ரீ கண்ணபிரானுக்கும் டோலோத்ஸவமும் கண்டருளப் பண்ணிவைத்தார்கள்.

டோலோத்ஸவ ஸமயத்தில் மண்ணுக்கும் விண்ணுக்கும் வானவரும் தானவரும் மற்றுமெல்லோரும் தொழுதேற்றுமெம்பெருமானாகிய கண்ணபிரானுடைய மகிமையைப்பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வெம்பெருமானுடைய திருவோலக்கத்தில் அவனருளான வமுத மாறி என்னலாம்படியான ஓரரிய உபந்யாஸத்தை தேவர்க்கமுதுண்ணும்படியான ஸூக்திகளால் அருளிச்செய்து அவ்வக்ரகாரவாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆநந்த ஸாகரத்தில் மூழ்கச்செய்தருளினர்.

(3)

கத்தவாலில் ஸ்ரீ பட்டாபிஷேக ஸ்ரீமுக ஸேவை

இப்பவும் ஸ்ரீ அஹோபில மடாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்த்ராக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகனுடைய பட்டாபிஷேக ஸ்ரீமுகமானது கத்தவால் ஸம்ஸ்தானத்தில் ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து வாத்ய கோஷங்களுடன் ஛த்ர சாமராதி விந்ஹங்களுடனும் பல்லாக்கில் அரண்மனைக்கு எள்ளப்பண்ணப்பட்டு அந்த ஸம்ஸ்தாநத்திற்கும் நைஜாம் ராஜ்யத்திற்கும் ஏஜண்டாகவும் ஸ்ரீ கார்யமாகவும் ஸ்ரீ அழகிய சிங்கரால் நியமிக்கப்பட்ட சிலுக்கூர் வெங்கடராகவாசாரியரால் ஸேவிக்கப்பட்டது. தெலுங்கு பாஷையில் ஆசார்யாளுடைய மஹிமையையும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ரமஹாதேசிகளுடைய வைபவத்தையும் விஸ்தாரமாக அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் மஹாராணியார் முதலான ராஜபந்துக்களாலும் சூழ்ந்த ஸபையில் அவர் உபந்யஸித்தார், பிறகு மஹாராணியார் ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் ஸ்ரீமுக ஸேவை செய்தவருக்கும் ஏற்பட்ட மர்யாதைகளைச் செய்து வைத்தார். சில நாள் கழித்து கத்தவால் ஸ்ரீ அஹோபில மடத்திலும் அதே மாதிரி ஷ வெங்கடராகவாசாரியரால் ஸ்ரீமுக ஸேவை செய்யப்பட்டது.

சி. மா. வெங்கடராகவ தாஸன், ஸ்ரீ கார்யம் & ஏஜண்டு,
ஸ்ரீ அஹோபில மடம், ஹைதிராபாத் ஸ்டேட்

---

(4)

[illegible]

[கருடபுரம் வ்யாகரண ஶிரோமணி ஸ்ரீ. உப. தி. ஈ. திருமலாசாரியர்]

1. [illegible] |
[illegible] ||

2. [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

3. [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

4. [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

5. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

6. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

7. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

8. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

9. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

10. [illegible] ।
[illegible] ॥

11. [illegible] ।
[illegible] ॥

12. [illegible] ।
[illegible] ॥

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடசாலை

பாடசாலையைச் சேர்வதற்காக மனுவைத் தாக்கல் செய்வதற்கு, வரும் ஏப்ரல்மீ 30வ வரையில் காலம் கொடுத்தால் ஸௌகர்யமாக இருக்குமென்று சிலர் எழுதி அனுப்பி இருக்கிறபடியால், அதை அநுஸரித்து 1942வ ஏப்ரல்மீ 30வ பர்யந்தம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம். மற்றும் சில விஜ்ஞாபநங்கள் செய்யப்படுகின்றன. மத்யம பாகத்திற்கும் ஶிரோமணி பாகத்திற்கும் மாத்ரம் இப்பொழுது வித்யார்த்திகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ப்ரதம பாகமாகிய பாலஶிக்ஷைக்கு ஸம்விதாநம் செய்யப்படவில்லை. மத்யம பாகத்தின் முதல் வகுப்பைச் சேர விரும்புகிறவர்கள் பால ஶிக்ஷை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். கொஞ்சமேனும் ஸம்ஸ்க்ருத பாஷாபரிசய மற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். பாஷாந்தர பரிசயம் செய்திருப்பவர்கள் பாடஶாலையிற் சேர்வதற்கு அர்ஹர்களாவென்று சிலர் கேட்டிருக்கிறார்கள். அவர்கள், பாடஶாலையில் சேர்ந்து படிப்பதற்கு அவஶ்யமான வயஸ்ஸின் ஆநுரூப்யத்தையும் உசிதமான ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநத்தையும் வைதிக ஆசாரங்களிலும் ஆச்ரம கர்மாநுஷ்டாநங்களிலும் பூர்ணமான ஶ்ரத்தையையும் உடைத்தாயிருக்கும் பக்ஷத்தில், அவர்களையும் அர்ஹர்களாகவே ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றலாம்.

உசிதமான உபபத்தியுள்ள சில ஆஸ்திகர்கள், தமது பாலர்களை இந்தப் பாடஶாலையில் சேர்ப்பதற்குத் தாம் விருப்பமுள்ளவர்களாக இருப்பதாகவும், அப்படி அவர்களைச் சேர்த்துக் கொள்வதால் ஏற்படும் அதிக வ்யயத்தைக் குறித்துத் தாம் ப்ரதி மாஸமும் ஒரு ப்ரதி ப்ரயோஜநத்தை த்ரவ்ய ரூபமாகச்செய்வதற்கு ஸந்நத்தர்களாக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அந்நத்தையோ வித்யையையோ விக்ரயம் செய்வது ஶாஸ்த்ர நிஷித்த

மானதால், அவர்களுடைய வேண்டுகோளை ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றமாட்டார்; ஆனால், அவர்கள், அப்யவஹாரம் வஸதி முதலானவைகளுக்கு ஏதாவது வேறு ஒரு ஏற்பாட்டைத்தாமே செய்துகொண்டு, வித்யாப்யாஸத்திற்கு மாத்ரம் பையன்களைப் பாடஶாலைக்கு அனுப்புவதாக இருந்தால், அப்பொழுது அந்தப் பாலர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றலாம்; ப்ரகாராந்தரேண அவர்கள் பாடஶாலையின் நிர்வாஹத்தை உத்தேசித்து த்ரவ்யம் ஏதாவது ஸமர்ப்பித்தால் அதை அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கலாம். அப்படிச் சேர்க்கப்படும் வித்யார்த்திகளும், மற்றை வித்யார்த்திகள் போல வைதிகாசாரம் வைதிக கர்மாநுஷ்டாநம் முதலியவைகளைப் பாடஶாலை அதிகாரிகளால் விதிக்கப்படும் நியமங்களுக்கு உட்பட்டுச் சரிவரச் செய்து வரவேண்டும். விருத்தாசாரங்களில் ருசியுள்ளவர்களுக்கு இந்தப் பாடஶாலையில் ப்ரவேஶமே கிடைக்கமாட்டாது.

* * * *

ஆசார்யர்களின் ஸாமரஸ்யம்

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ. உப. புதுக்கோட்டை ஏ. ஸ்ரீநிவாஸராகவாசார்யரால் ப்ரகாஶிப்பிக்கப்பட்டுள்ள ந்யாய கலாப ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தை விமர்ஶித்து வரும் ஸந்தர்ப்பத்தில், ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாக நமது ஆசார்யகளுடைய க்ரந்தங்களில் தென்படும் நிர்வாஹ பேதங்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்கும்படி ஸம்பவித்தது. அந்த ப்ரகரணத்தில், ஸ்ரீ தேஶிகனுக்கும் அவருக்கு ப்ராசீநர்களாயுள்ள ஸயூத்யர்களான சில ஆசார்யர்களுக்கும் ஓரிடத்தில் அபிப்ராயபேதம் தென்படுகின்றதென்றும் விஜ்ஞாபித்திருந்தோம். எந்த விஷயத்தில் அம்மாதிரியான அபிப்ராயபேதம் தென்படுகின்றது என்பதை விளக்குகையில், ஜீவன்களுடைய ப்ரதம ப்ரவ்ருத்தி காலத்தில், சில பூர்வாசார்யர்கள், 'பகவான் அந்தக் காலத்தில் கேவலம் உதாஸீநனாக இருக்கிறான்; அப்பொழுது ஜீவன்கள் ஸ்வயமாகவே ஸ்வேச்சையைக்கொண்டே ப்ரவர்த்திக்கிறார்கள்' என்று அபிப்ராயப்படுகிறார்களென்றும், ஸ்ரீ தேஶிகன், 'அந்தக் காலத்திலும் ஜீவன்கள் பகவத் பரதந்த்ரர்களாகவே ப்ரவர்த்திக்கிறார்கள்; அப்பொழுது ஜீவன்களுக்கு ஸம்பவிக்கும் ப்ரவ்ருத்தியும் பகவத் ப்ரேரணத்தின் பேரிலேயே ஸம்பவிக்கிறது' என்று திருவுள்ளம் பற்றியிருக்கிறாரென்றும் சொல்லிவிட்டு, 'ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யரும் அந்தப் பூர்வாசார்யர்களுள் ஒருவராகத் தெரிய வருகிறது என்றும் எழுதி இருந்தோம்.

திருவையாறு பாடஶாலையில் ஶாஸ்த்ர ப்ரவசத கர்த்தாவாக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீ. உப. வித்வான் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஆபாதத: தோன்றும் அந்த

விரோதத்திற்குப் பரிஹாரத்தை அநுக்ரஹித்து, ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யருடைய ஸூக்திக்கும் ஸ்ரீதேஶிகனுடைய ஸூக்திக்கும் ஸாமரஸ்யமே உளது என்று ஸ்தாபித்திருக்கிறார். அதை ஸங்க்ரஹமாக இவ்விடத்தில் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

“ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் பகவானுக்கு உபேக்ஷகத்வமும், பிறகு அநுமந்த்ருத்வமும், சிற்சில விஷயங்களில் ப்ரயோஜகத்வமும் உண்டு. அவைகளுள் உபேக்ஷகத்வமாவது—அந்தந்த ப்ரவ்ருத்தி காலத்தில் விஶேஷப்படியாகத் தடுக்காமல் இருப்பதே. அந்த உபேக்ஷகத்வம் அப்படித் தடுக்காமல் இருப்பதுதான் என்பதானது,

“ஸாதாரணோ ஹி ஹேது: ஸஸ்யஸ்யேவ வ்ருஷ்டிவத் ஸர்வகார்யாணாம்”

[எல்லா கர்ர்யங்களுக்கும், விதைகளுக்கு ஜலம் போல பகவான் ஸாமாந்யஹேது] என்பதால் விளங்குகின்றது. இப்படிப்பட்ட உபேக்ஷகத்வமே ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யருக்கு அபிமதம்; ஸர்வாத்மநா ஔதாஸீந்யம் அவருக்கு அபிமத மன்று. இது, ரசநாநுபபத்த்யதிகரண ஸூத்ர ஶ்ருதப்ரகாஶிகையில் ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில், ஶக்தனாக இருக்கும் ஈஶ்வரனுக்கு உபேக்ஷகத்வம் எப்படி உபபந்நமாகு மென்று ஶங்கித்துக்கொண்டு, அதற்கு ஸமாதாநமாக, ‘ஆதியில் ஶாஸ்த்ர ப்ரவர்த்தந காலத்திலேயே ஸாமாந்யமாக அஹித ப்ரவ்ருத்தி நிவாரணம் செய்யப்பட்டிருக்கிற படியால், இவ்விடத்தில் பகவானுடைய உபேக்ஷகத்வமானது ஸர்வாத்மநா உபேக்ஷணம் செய்வதுதான் என்று சொல்வது சரியாக மாட்டாது; அந்த ப்ரவ்ருத்தி காலத்தில் விசேஷமாக ப்ரவ்ருத்தி நிவாரணம் செய்யாமல் இருப்பதுதான் என்றுதான் சொல்லவேண்டும்’ என்று அநுக்ரஹித்திருக்கிறபடியால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு ஸாதாரண உபகாரகத்வம் மாத்ரம் உளது என்பதுதான் அவருடைய அபிப்ராயம் என்பது ஸ்பஷ்டம். இந்த ஸாதாரண உபகாரகமாக இருப்பதைக் காரயித்ருத்வம் என்று சொல்வார்கள். பராயத்தாதிகரண ஶ்ருத ப்ரகாஶிகையிலும் இந்த அபிப்ராயமே வெளிப்படுகின்றது. அவ்விடத்தில், ‘ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு இச்சா ஜநகத்வம் இருக்கும் பக்ஷத்தில், அவர் அப்பொழுது உதாஸீநராகவே இருக்கிறார் என்று எப்படி சொல்லக் கூடும்?’ என்று ஶங்கித்துக்கொண்டு, ‘சொல்லுகிறேன். இந்தத் தோஷங்களெல்லாம் ப்ரஸங்கிக்கமாட்டா. உபகாரம் என்பது, ஸாதாரணோபகாரமென்றும் விஶேஷோபகார மென்றும் இரண்டு வகைப்படும்; அவை இரண்டும் பிந்நங்களே. ஆகையால் இந்த அநுபபத்திகளெல்லாம் அந்த வைஷம்யத்தால் பரிஹரிக்கப் பட்டுப் போகின்றன’ என்று ஸமாதாநம் சொல்லி இருக்கிறார். ‘க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து’ இத்யாதி ஸூத்ர ஶ்ருதப்ரகாஶிகையி

லும், இது வ்யக்தமாகத் தெரிகின்றது. அவ்விடத்தில், ‘ஸர்வ ஜீவன்களுக்கும் சிச்சக்தி ப்ரவ்ருத்திஶக்திகளில் கரணகளேபர ரூபமான பரிகரதாநம் செய்திருப்பது பரமாத்மாவேயானதால், கர்த்ருத்வ மாத்ரம் பராயத்தம்; விஶேஷ கர்த்ருத்வம் பராநுமதியை அபேக்ஷித்திருக்கிறபடியால் பராயத்தம்’ என்னும் வாக்யங்கள் காணப்படுகின்றன. இது ப்ரதம ப்ரவ்த்தியிலும் பகவானுக்கு ஸாமாந்ய கர்த்ருத்வம் உண்டு என்பதை த்ருடப்படுத்துகின்றது.

“ஸ்ரீ தேஶிகனுடைய அபிப்ராயமும் இதுவே. ஏனென்றால், ‘ஸாதாரண்யாந் ந ஹேதுத்வமிஹ விஶேஷகார்யதாஜ்ஞாநாத்’ என்று கீழ் உதாஹரித்திருக்கிறபடி ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ஸாமாந்ய காரணத்வமே அவர்களால் அப்யுபகமம் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்திலும் ஜீவ பரிச்சேதத்தில் ‘கர்த்ருத்வமானது போக்தாவாக இருக்கிற ஜீவனுக்கே; அது ஸாமாந்யமாக பரம புருஷஹேதுகம் என்பது கர்த்ரதிகரணம் பராயத்தாதிகரணம் இவைகளில் ப்ரபஞ்சிதம்’ என்னும் வாக்யங்களால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாமாந்ய காரணத்வமே சொல்லப்பட்டிருக்கின்றது என்பது தெரிகிறது. இவ்விடத்தில் வ்யாக்யாநமும், காலாத்ருஷ்டாதிகள் போல் அப்பொழுது ஸாதாரணமான காரயித்ருத்வமே உண்டு என்று சொல்லுகின்றது.

“இவைகளிலிருந்து, ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு ஸாதாரணத: காரயித்ருத்வமே உண்டு என்பதே ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யருடைய ஆஶயம் என்பதும், விஶேஷத: காரயித்ருத்வம் ஸ்ரீ தேசிகனாலும் அப்யுபகமம் செய்யப்படவில்லை என்பதும் விளங்குகின்றன. ஆகையால், இரண்டு ஆசார்யர்களுக்கும் இந்த விஷயத்தில் ஸாமரஸ்யமே நன்றாக இருக்கின்றதென்றே தெரிகிறது.”

இப்படி நமது ஆசார்யர்களுள் ஸாமரஸ்யத்தை நிர்வஹிக்க வேண்டியது அவஶ்யமே. ஏற்கெனவே சென்ற ஸஞ்சிகையில் நாம் விஜ்ஞாபித்துக் கொண்டிருக்கிற ப்ரகாரம், ஸத்துக்களுடைய ஸூக்திகளில் ஒரு அம்ஶத்தையும் வீணில் பாதிப்பதற்கு நாம் அர்ஹர்களல்லர்.

“ஸத்பக்ஷ்யா ந வயமிஹ ஶ்ரோதா வாசிதம் கிம் விதேயா:”

2/10/02